ലക്ഷ്മീഭായി 1923-24

പുസ്തകം 14 ലക്കം 12

3L

N24.14.12

186743

50

3 - OCT 1924

Regd: No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷிஸூ,

1923—1924.

ஸம்புடம் 14.

புரட்டாசிமீ.

SEPTEMBER.

ஸஞ்சிகை 12.

பத்ராதிபர்.

நட்டாதூர்
ஸ்ரீநிவாஸாசார்யர்,
பீ.ஏ., பீ.எல்.

கார்யதர்சி.

ஆர். ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள். 317
2. அர்த்த பஞ்சக விமர்சநம்:— 320
3. கூடிதங்கள்.—இ. ரங்கநாதாசார்யர். 324
4. ஸம்வத்ஸரமுடிவில் விஜ்ஞாபனம்:—கார்யதர்சி. 324
5. ச்ருதி ப்ராமாண்யம்:—ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலசக்ரவர்த்தி, பி.ஏ., 325
6. ச்ராத்தம்:—ஸ்ரீ. உ. வே. காடந்தேத்தி-கோபாலாசார்யர். 333
7. ஸர்வேச்வர காருண்யம்:—
சிரோமணி, ஸ்ரீ. உ. வே. ஸ்ரீராமதேசிகாசார்யர். 341
8. நீதிச்லோகங்கள்:—ஸ்ரீ. உ. வே. வெ. க்ருஷ்ணமாசார்யர். 346
9. நம்மாழ்வாரின் வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும்.
ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம், சே. நரஸிம்மாசார்யர். 25
10. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழி பெயர்ப்புடன்:—
ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம், சே. நரஸிம்மாசார்யர். 65

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

உலக ப்ரசித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3.



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

"ஆரோக்கிய தீபிகை."

சென்னை பிரபல வைத்தியரும், சுகாதாரப் பிரசாரகருமான டாக்டர் யூ. ராமராவ் வெளியிட்டுவரும் இவ்வரிய மாதாந்தத் தமிழ் பத்திரிகையின் ஆகஸ்டு மாதத்திய இதழ் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் பலனாக பல இடங்களில் காலரா வென்னும் கொடிய தொத்து நோய் பரவியிருப்பதின் முக்கிய காரணங்களையும், வேறு பல தொத்து நோய்கள் பரவுவதற்கு அநுகூலமான நிலைமை ஏற்பட்டிருப்பதையும் ஆசிரியர் குறிப்பிட்டு, அவைகளை நிவர்த்தி செய்யும் மார்க்கத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். நாம் ஆரோக்கியமாக வாழ்ந்து வருவதற்கு நமது சர்மத்தைச் சுத்தமாக் வைத்திருக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி குழந்தைகளுக்கும், கர்ப்ப ஸ்திரீகளுக்கும், ஏனையோருக்கும் பால் முக்கியமான உணவுப் பொருள்களிலொன்றாதலால் சுத்தமான பாலை உபயோகிக்கவேண்டிய அவசியத்தையும், பால் கெட்டுப்போகாமல் வைத்திருக்க வேண்டிய முறையையும் குறிப்பிட்டு சென்னை கார்ப்போரேஷன் சுகாதார இலாகாதார் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் சாராம்சமும் இந்த இதழில காணப்படுகிறது. இந்த வியாஸமானது ஸ்திரீகளுக்கு மிகுந்த உபயோகமாகவிருக்கும். க்ஷய ரோகம் உண்டாகாமல் தடுத்துக்கொள்ளும் மார்க்கங்கள் மற்றொரு வியாஸத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சுட்டகாயங்களுக்கு சுலபமான பரிகாரம், வைசூரிக்கும் ஈக்களுக்கு முள்ள சம்பந்தம், தாய்மார்களுக்குச் சில யோஜனைகள், முதலிய மற்றும் சில ருசிகரமான வியாசங்களும் இந்த சஞ்சிகையில் அடங்கியிருக்கின்றன. சுகாதார தத்துவங்களை எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு இப்பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. வருடச் சந்தா மிகவும் குறைவாக 1—8—0 ஆக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் சென்னைச் தம்புசெட்டித்தெரு 323-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள இப்பத்திரிகையின் கார்யாலயத்திற்கு எழுதி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

கா.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.
காரியதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ரக்தாக்ஷி ஸ்ரீ, புரட்டாசிமீ. [ஸஞ்சிகை 12.

“ த்ரிபுவந கமநம் தமாலவர்ணம் ரவிகர கௌர வராம்பரம் தயாநே
வபு: அலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ”

ஸ்ரீபாகவதம். 1-9-32.

பத்ராதிபரின் குறிப்புகள்.

நமது அத்யக்ஷருக்கு ஸபையின் ஸத்காரம்.

நாளது ஆவணிமீ 30வ (14—9—1924) ஞாயிற்றுக்கிழமை தினம் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியில் நமது அத்யக்ஷர் கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீமான் வ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்ட விஷயமாய் நமது ஸபையின் குதூஹலத்தைக் கொண்டாடும்பொருட்டு ஒரு ஸத்கார உத்ஸவம் (entertainment) நடத்தப்பட்டது. அப்பொழுது ஸபையின் அங்கத்தினர்கள் ஏராளமாய் விஜயம் செய்திருந்தார்கள். அன்று ஸாயங்காலம் 4-மணிக்கு கனம் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி மங்கள வாத்யங்களுடனும், பூர்ணகும்ப வேதபாராயணங்களுடனும் ஸந்நிதியின் முன்மண்டபத்திலிருந்து ஸபையாரால் எதிர்கொண்டழைக்கப்பட்டார். பின்னர், கோயிலில் ஒவ்வொரு ஸந்நிதியிலும் அவருடன் எல்லாருமாகச் சென்று ஸேவித்து அர்ச்சனைகளைச் செய்வித்துத் தீர்த்தம் முதலியவைகளைப் பெற்றார்கள். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்ரீ பார்த்தஸாரதிக்கு ஒரு விலையுயர்ந்த பீதாம்பரத்தை ஸமர்ப்பிவித்தார். அந்தந்த ஸந்நிதிகளில் நடக்கவேண்டிய மரியாதைகள் நடந்தபின்னர், அவரும் ஸபையோர்களுமாக நின்று ஒரு போட்டோ (photo) படம் பிடிக்கப்பட்டது.

186743

இதன்மேல் ஸபையோர்கள் ஸ்ரீ ஆண்டாள் ஸந்நிதி மண்டபத்தில் கூடினார்கள். முதலில் இந்த ஸத்கார உத்ஸவத்தில் தங்களுக்கிருக்கும் குதூஹலத்தைத் தெரிவித்தும் ஸ்ரீமான் கனம் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிக்கு ச்ரியபதியின் க்ருபையை முன்னிட்டு உத்தரோத்தர அபிவ்ருத்தியை ஆசாஸித்தும் நாமக்கல் தாலூகா வேலூரிலிருந்து ஸ்ரீ. உ. வே. கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமி ஸபைக்கு அனுப்பிய தந்தியும், மஸூலிபட்டணத்திலிருந்து ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் ஸ்வாமி அனுப்பிய கடிதமும் படிக்கப்பட்டன. இந்த ஸத்கார ஸம்பந்தமாக த்ரவ்யத்தாலும் மற்ற ப்ரகாரத்தாலும் ஊக்கத்துடன் உபகரித்த ராவ்பஹதூர் ஸ்ரீமான் வேமூர் ரங்கநாதம் செட்டியார் அடுத்தாற்போல் அய்யங்காரவர்களைச் சில ச்லோகங்களைப் படித்து ஸ்வாகதம் (welcome) செய்தார். இவரைத் தொடர்ந்து ஸபையின் அத்யக்ஷ ப்ரதிநிதிகளிலொருவராகிய திவான் பஹதூர் ஸ்ரீமான் டி. நம்பெருமாள் செட்டியாரவர்கள் அய்யங்காரவர்களின் குணநிசயங்களையும் ஸம்ப்ரதாய அபிமானத்தையும் புகழ்ந்து அவருக்கு உந்நதலௌகிகப் பதவி கிடைத்ததில் நமது ஸபையாருக்குள்ள அந்தரங்கமான ஸந்தோஷத்தைத் தெரிவித்து ஆசிகூறிச் சுருக்கமாகவும் இனிமையாகவும் தெலுங்கில் ப்ரஸங்கித்தார். ஸபையின் கார்யதர்சி ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, கனம் அய்யங்காருக்கு நமது ஸம்ப்ரதாயத்திலுள்ள ஊக்கத்தையும் வித்வான்கள் பக்கலிலுள்ள அபிமானத்தையும் நமது ஸமூஹத்துக்கும் விசேஷித்து நமது தீபிகைக்கும் அவர் செய்துவரும் உபகாரங்களையும் எடுத்துரைத்து ஸபையின் சார்பாக அவருக்கு ஸர்வஸம்ருத்தியு முண்டாக வேண்டு மென்று மங்களாசாஸநம் செய்தார். இவரைத் தொடர்ந்து தீபிகையின் பத்ராதிபர், ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் பேசினதில், அவதார ஆரம்பம் முதல் நாநாவித விசித்ர சேஷ்டிதங்களால் ஜகத் ரக்ஷணம்பண்ணி ஸர்வலோகமும் உஜ்ஜீவிக்கும்படி சாஸ்த்ர 'நெறிகளையெல்லாமெடுத்துரைத்த நிறை ஞானத் திருமூர்த்தி' யாகிய ஸ்ரீபார்த்தஸாரதியின் கடாக்ஷ விசேஷத்தால் நமது ஸபையும் அதன் அத்யக்ஷரும் ஸர்வாபீஷ்டங்களையுமடைய வேண்டு மென்றும், நமது அத்யக்ஷர் 'ஸூக்ஷ்மவாநு நிமிதவாஜ்ஞி:' என்னும் ச்லோகத்தில் அருளிச்செய்யப்பட்டபடியே சாஸ்த்ர விச்வாஸம், பகவத்விஷயத்தில் தீக்ஷ்ணபுத்தி, ஆத்மகுணம் ஸத்ஸம்ப்ரதாயத்தினால் பரிசுத்தியடைந்த மனது, நன்னெறிகளில் ஊற்றம் சில்லரைக் கட்டுப்பாடுகளில் சிறைப்படாமை, அற்ப புருஷார்த்தங்களில் வைமுக்யம் (ஈடுபடாமை) முதலியவை பெருகிய ஆழ்வார், நாதமுனிகள் துடக்கமாய்த்தழைத்து வரும் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தில் லௌகிக ஆஸ்திகர்களுக்கு ஒரு வழிகாட்டும் விளக்காய் நீடூழி விளங்க வேண்டுமென்று ஆசாஸநம் செய்தார். ஸ்ரீமான் எஸ். [illegible] பிள்ளையவர்கள் முன்பேசினவர்களை

யநுஸரித்துக் களிகூரி கனம் ஐயங்கார் ஆங்கிலப்படிப்பிலும் லௌகிகப்பதவியிலும் மேம்பாடடைந்தும் அவருக்குப் பகவத் பக்தியும் ஸ்ரீவைஷ்ணவ மதாபிமானமும் நிரம்பியிருப்பதைக் குறிப்பிட்டுப் புகழ்ந்து பேசினர்.

இதன் பிறகு ஸபையின் பெருத்த கரகோஷங்களுக்கிடையே கனம் ஐயங்காரவர்கள் எழுந்திருந்து தம்மைச் சபையோர்கள் அத்யக்ஷராக நியமித்த விஷயத்தில் அவர்களுடைய ஆஜ்ஞையை சிரஸாவஹித்து அப்பதவியைத் தாம் ஒப்புக்கொண்டிருப்பதாயும், தமக்கு பாகவதர்கள் அந்தரங்கமாகச்செய்யும் மங்களாசாஸநத்தையே வேறு எந்தப்பதவியைக் காட்டிலும் உயர்ந்ததாகத் தாம் நினைப்பதாயும், ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தினர் எல்லாரையும் நமது ஸித்தாந்தத்தில் அத்யந்தம் ச்ரத்தையுள்ளவர்களாகும் வரையில் நமது ஸபை தன் கார்யத்தைச் செய்ததாகாதென்றும், இதற்கு நம்மவர்க்குள்ளிருக்கும் அத்யந்த அநர்த்தகரமான கலைகக்ஷியென்னும் படிகளிலுள்ள வைஷம்யங்களை ஒழிப்பதே முக்கியகார்யமென்றும் இப்படிப்பல விஷயங்களைப்பேசி, இந்த ஸத்காரவைபவத்துக்குத் தமது ஹார்த்தமான க்ருதஜ்ஞதையையும் ஸந்தோஷத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர், ஸ்ரீ. உ. வே காண்டூர் ராமாநுஜாசார்யர் ஸ்வாமியின் உபந்யாஸம் நடைபெற்றது. அதில் ஸ்ரீவைஷ்ணவமதத்தின் மேன்மையும், பகவத்ஸந்நிதிகளின் பழைமையும், ப்ரஸ்தான த்ரயத்திலும் ஸ்ரீவிஷ்ணுவின் பரத்வமே ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதும் அது ஸ்ரீசங்கராசார்யராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ப்ரகாரமும், பூர்வர்களான ஸ்ம்ருதி கர்த்தாக்கள் அபிப்ராயங்களுக்கிணங்கக் கனம் ஐயங்காரவர்கள் ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்தானத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பதின் பொருத்தமும், நமது ஸபையின் கார்யங்கள் தமிழ் நாட்டில் மட்டுமெல்லாமல் தெலுங்கு தேசத்திலும் நடைபெறவேண்டிய ஆவச்யகமும் எடுத்துரைக்கப்பட்டன.

கடைசியாக ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உ. வே. டி. ராமாநுஜய்யங்கார் ஸபையோருக்கும் அத்யக்ஷருக்கும் ஸந்நிதி தர்மகர்த்தாக்களுக்கும் உபந்யாஸம் செய்த ஸ்வாமிக்கும் வந்தனம் கூறினர்.

பிறகு சந்தனம் தாம்பூலம் பகவத்ப்ரஸாதம் முதலியவை விநியோகிக்கப்பட்டன. இந்த வைபவங்களில் மிகுந்த கூட்டமாக ஸபை அங்கத்தினர்களும் மற்றவர்களும் அந்வயித்தார்கள். ஸ்ரீபார்த்தஸாரதியின் க்ருபையினால் எல்லாம் நிர்விக்னமாக ஒருகுறைவுமின்றி த்ருப்திகரமாய் நடைபெற்றன. இக்கார்யங்களின் பாரத்தை வஹித்து உத்ஸாஹத்துடன் அவற்றை நிறைவேற்றிவைத்த ராவ்பஹதூர் ஸ்ரீமான் ரங்கநாதம் செட்டிகாருவுக்கும் ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உ. வே. டி. ராமாநுஜய்யங்காருக்கும் ஸ்ரீ. உ. வே. டி. திருவேங்கடாசார்யருக்கும் நமது ஸபையின் ஆத்யந்திகமான நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:.

அர்த்த பஞ்சக விமர்சநம்.

(ஸ்ரீ. உ. வே. டி. ரகுநாதாசார்யர்.)

ஈச்வர ஸிருஷ்டியில் மனுஷ்ய ஜன்மத்திற்கு அதிலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்— 'ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண ஸதா' (எல்லா சாஸ்திரங்களையும் ஆராய்ந்து பார்த்து அடிக்கடி விசாரித்து யோஜித்துப் பார்த்ததில் எப்பொழுதும் ஸ்ரீமந்நாராயணனை த்யாநம் செய்யவேண்டு மென்பதொன்றுதான் தீர்மானமாக ஏற்படுகிறது) என்கிறபடி ரகஸ்யத்ரயத்தில் கடைந்து எடுத்த அமிருதம் என்னவென்றால் நாராயணுதி சப்தங்களிலே விவக்ஷிதமான ஜீவ ஈச்வர ஸம்பந்த விசேஷத்தை அநு பந்தித்திருக்கும் அர்த்தபஞ்சகமே; அதாவது அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய ஐந்துவிஷயங்கள். அவையாவன:— (1) நாம் அடையவேண்டிய ப்ருஹ்மத்தினுடைய அதாவது ஈச்வரனுடையஸ்வரூபம் (2) ஈச்வரனை அடைகிறதாயும் தேகத்தைக் காட்டிலும் வேறுனதாயுமுள்ள ஆத்மஸ்வரூபம் (3) ஆத்மா ஈச்வரனை எப்படி அடைகிறது; அதாவது அடையும்வழி அல்லது உபாயம் (4) ஈச்வரனை அடைவதால் ஆத்மாவுக்கு உண்டாகும் பலன் (5) ஆத்மா ஈச்வரனை அடைவதற்கு விரோதிகள். இவற்றைத்தான் எல்லா வேதங்களும் இதிஹாஸ புராணங்களும் முறையிடுகின்றன. நமக்கு இந்த அர்த்தபஞ்சகம் லௌகிக வ்யாபாரத்திலும் ஒவ்வொரு விஷயத்திலும் நிச்சயமாய் ஏற்பட்டிருக்கிறது என்பது எளிதாகத்தென்படும். நாம் உத்தியோகமோ அல்லது வேலையோ செய்து சம்பாதிப்பதில் (1) நமக்கு அடையவேண்டிய இடம் கச்சேரி அல்லது தொழில் செய்யுமிடம் (2) அடைகிறவர்கள் நாம் (3) நாம் வேலை செய்து எஜமானனை ஸந்தோஷப் படுத்துவது வழி (4) பலம், நமக்கு கிடைக்கும் பணம் (5) தேகத்துக்கு உண்டாகும் உபாதி அல்லது தொழிலுக்குப் போகாதபடி ஏற்படும் தடங்கல்கள். ஒருமனுஷ்யன் விதேசத்திலிருந்து ஸ்வதேசத்துக்குப் போகும்பொழுது அர்த்தபஞ்சக ஜ்ஞானத்துடன் செல்லுகிறான். அதாவது (1) அடைய வேண்டியது சொந்த ஊர். (2) போவது மனுஷ்யன். (3) உபாயம் ரயில், மோடார் அல்லது வேறு வண்டி அல்லது நடை. (4) பலம் பந்துமித்ரர்களைப் பார்ப்பது. (5) விரோதி வெள்ளம் முதலிய இடஞ்சல்கள். இதேமாதிரியாக ஒவ்வொரு விஷயத்திலும் அர்த்த பஞ்சக ஜ்ஞானம் ஏற்பட்டு வேலைசெய்கிறோம். ஆனால் ஈச்வரனுடைய தேஜ

ஸ்துப ஸ்தாநத்திலிருக்க வேண்டிய நாம் ஸ்வதேசத்தில் இல்லாமல் அந்ய தேசத்திலிருக்கிறோம். சொந்த இடம்போக எண்ணமில்லாமல் இளம்பிள்ளைகளைக் காரியத்துக்கு ஏவினல் நடுவில் விளையாட்டு விஷயங்களில் ஈடுபட்டுச் செய்யவேண்டிய கார்யத்தை மறந்திருக்குமாபோல் மறந்து திரிந்து கொண்டிருக்கிறோம். இப்படி யிருக்கிறோமென்று தெரிந்தால் அதிலிருந்து மீண்டு நாம் செல்லவேண்டிய இடத்திறகுப் போகலாம். அந்த ஜ்ஞாபகம் கொஞ்சம்கூட ஏற்படவில்லை. இந்த ஜ்ஞாபகமில்லா திருப்பது படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் வாசியில்லாமல் ஒரேமாதிரியாய்த்தா னிருக்கிறது. ஏதோ ஜன்மாந்தர ஸுக்ருதத்தால் நல்ல ஆசார்யர்களின் கடாக்ஷம் உள்ள சிலபேருக்குத்தான் இந்த நிலைமைதெரிந்து நாம் அடைய வேண்டிய இடத்தை அடையத்தகுந்த ஏற்பாடு செய்யவில்லையே என்கிற மனக்கவலை உண்டாகிறது. ஆனல் இது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் அவச்யம் ஏற்படவேண்டிய கவலை.

(1) முதலில் மனுஷ்யர்களுக்கு ஆஸ்திக்யம் ஏற்படவேணும். அதாவது நம்பெரியோர்கள் சொல்லுகிறபடி வேதம் அநாதியென்றும் ஸ்மிருதிகள் முதலானவை இதை விவரணம் செய்கிறதென்றும் இவைதள் ஈச்வரனுடைய ஆஜ்ஞைகளென்றும் அநாதிகாலமாக இந்த ஆஜ்ஞைகளை மீறிநடந்ததால் உண்டான பகவந்நிக்ரஹத்தாலே இப்பொழுது நமக்கு ஸம்ஸாரதசை வந்திருக்கிறதென்கிற எண்ணமும் உண்டாகவேணும். இல்லாவிட்டால் வேறுவிதமாய் இந்த மனுஷ்ய ஜன்மம் ஏற்பட்டதிற்குக்காரணம் ப்ரமாண பூர்வகமாகச்சொல்லமுடியாது. நம்மைவிட ஸர்வஜ்ஞராயிருந்த நம்பூர்வாசார்யர்களின் அபிப்பிராயங்களில் நமக்கு நம்பிக்கை உண்டாகவேண்டும். நம்பிக்கை பிறந்தால் இந்த ஜகத்தை உண்டுபண்ணி அதை ஸம்ரக்ஷித்து வருகிறவர் ஒருவர் இருக்கிறாரென்றும், அவருக்கு அளவில்லாத ஞானம், சக்தி, ஆனந்தம், வீர்யம், தேஜஸ், தயை, பொறுமை, ஸத்யம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் முதலிய குணங்கள் இருக்கின்றவென்றும், அவர் ஸ்ரீமந்நாராயணனென்றும் எல்லாலோகங்களும் அவர் ஸொத்து என்றும் அவருக்கு நாம் எப்பொழுதும் அடிமைசெய்யக் கடமைப்பட்டவர்களென்றும், கர்மத்தால் ஸர்வவிதபந்துவான அவரைவிட்டுப்பிரிந்து அவர் ஜ்ஞாபகமே இல்லாமல் திரிந்துகொண்டிருக்கிறோமென்றும், அவரை மீண்டும் அடைவதே நமக்குப் புருஷார்த்தமென்றும், அவருக்கு நாம் வந்து சேரவில்லை என்கிற கவலை 'ஸ மஹாத்மா ஸுதுர்லப:' (தன்னைப் பக்தி செய்து அடைகிறவர்கள் மிகவும் அபூர்வம்) என்கிறபடியே அதிகமாக இருக்கிறதென்றும், ஆசார்யன் மூலமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

(2) இரண்டாவது, நம்தேஹத்தில் ஜீவன் ஒன்று இருக்கிறதென்றும், அது நித்யமென்றும், அதற்கும் ஈச்வரனுக்கும் சமமான சில குணங்கள் இருக்கின்றனவென்றும் ஆகையால் ஸமான ஸ்தானமாகிற பரமபதத்தை அது அடையத்தகுந்ததென்றும் தெரிந்துகொள்ளவேண்டியது.

(3) இப்படித்தெரிந்துகொண்டால் அவரை அடைவதற்கு உபாயம் என்ன என்கிற விசாரம் ஏற்படும். ஈச்வரனை அடையப் பக்தி ப்ரபத்தி என்று இரண்டு வழிகள் உண்டு. அதில் முதலான பக்தி மிகவும் ச்ரமஸாத்யமாயும் காலவிளம்பமுள்ளதாயும் இருப்பதால் இந்தக் கலியுகத்தில் பக்தியை சரிவர நடத்தமுடியாதென்று பார்த்து வர்ணாச்ரமாதி நியமமற எல்லோரும் உஜ்ஜீவிக்கவேண்டுமென்று கிருபை மேலிட்டு ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரம் என்கிற கிரந்தத்தில் ப்ரபத்தியினுடைய மகிமையையும் அதை எப்படி அனுஷ்டிக்கிறது என்பதையும் அவர்களுடைய ஜ்ஞானம், சக்தி, விச்வாஸம், பக்தி இவைகளுக்குத் தகுந்த மாதிரி செய்யவேண்டிய முறைகளையும் விசதமாக அருளிச்செய்கிறார். ப்ரபத்தி அநுஷ்டானத்தை ஸ்வநிஷ்டை, உக்திநிஷ்டை, ஆசார்யநிஷ்டை என்று மூன்றுவிதமாக ஏற்படுத்தி அதில் ஆசார்யநிஷ்டையே மிகவும் நிபுணக்ருத்யமென்று அபிப்ராயப்பட்டிருக்கிறார். ஸர்வ ஸம்பன்னனாய்க் கல்யாணகுணங்களோடுகூடிய ஒருபிரபு அல்லது ராஜாவைப்பார்த்துத் தன்னுடைய இஷ்டபூர்த்தியையடைய உத்தேச்யமுள்ளவன் எப்படி அந்த பிரபுவுக்கு அந்தரங்கனாயிருப்பவனைக்கொண்டு தன் இஷ்டத்தைச் சாதித்துக் கொள்வானோ, அதைப்போல் ஈச்வரனுக்கு ஆத்மஸ்தானராயிருக்கும் ஆசார்யரைக்கொண்டு தேஹாவஸானத்தில மோக்ஷத்தை அபேக்ஷிப்பது ஆசார்ய நிஷ்டை. இந்த ப்ரபத்தி சாஸ்திரமானது ஸ்ரீபகவான் கண்ணபிரானால் அர்ஜ்ஜுனனுக்குப் பாரதயுத்தத்தில் உபதேசிக்கப்பட்டது. இதை உலகத்தில் எல்லோரும் மோக்ஷோபாயமாக அனுஷ்டித்து உஜ்ஜீவிக்கட்டுமென்கிற கிருபையால் அர்ஜ்ஜுனனை வ்யாஜமாகக்கொண்டு எல்லோருடைய யோகக்ஷேமத்தின் பொருட்டும் உபதேசிக்கப்பட்டதென்று பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்கள். ஆகையால் நாம் ஈச்வரனை அடைய நல்ல ஆசார்யன் மூலமாய்ப் ப்ரபத்தி செய்யவேண்டியது அவச்யம். இல்லாவிட்டால் ஆற்றின் வெள்ளத்தைக் கடந்துபோகக்கொடுத்த தெப்பத்தைக்கொண்டு அக்கரை சேராமல் ஆற்றோடுசென்று கஷ்டப்படும் மனுஷ்யர்களைப்போல இந்தத்தேஹம் இருக்கும்பொழுதே ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்தானமாகிய பரமபதத்தை ஸதாசார்யன் மூலமாய் அடையவழிதேடாமல் மறுபடியும் கர்மாநுகுணமாகக்கெட்ட ஜன்மத்தையோ அல்லது நல்ல ஜன்மத்தையோ எடுத்துக் கர்ப்பவாஸாதிகஷ்டங்களை அனுபவிக்கும்படிநேரிடும்.

(4) ப்ரபத்தி செய்து தலைக்கட்டினால் நமக்குக் கிட்டுவது மோக்ஷம். அதில் ஜீவன் அளவற்ற நித்ய ஸுகத்தையும் நித்யமான பகவத் கைங்கர்ய

ஸாம்ராஜ்யத்தையும் அநுபவித்துக்கொண்டு கர்மஸம்பந்தமான பிறப்பு இல்லாமலிருக்கும். ஆகையால்தான் அதை எல்லோரும் அடைய முயலவேண்டியது அவச்யம். இதுதான் ஜீவனுக்கு இயற்கையான நிலைமை அல்லது ஸ்வரூபம்.

(5) மோக்ஷத்தை அடைவதற்கு விரோதிகள் இன்னவையென்றுதெரிந்து அவைகளைப் போக்க முயலவேணும். அவை அஜ்ஞானம், கர்மம், வாஸனை முதலானவை. இவற்றில் முக்கியமானது நீடூழிகாலமாய்ப் பகவானுடைய இஷ்டப்படி நடவாததினாலுண்டான அவனுக்கு உண்டான நிக்ரஹ ஸங்கல்பம் அல்லது கோபம். இதற்குக் காரணமாய் நமக்கு விரோதியாயிருக்கும் பாபமானது நம்மை நல்ல ஆசார்யர்களை அடைந்து நமக்கு ஹிதமான விஷயங்களைக் கேட்டு அனுபவிக்காதபடி செய்கிறது; கெட்ட விஷயத்தில் ருசியையும் உண்டுபண்ணி நம்மை இந்திரியகிங்கரராகச் செய்து சாப்பிடுவதும், போகங்களை அனுபவிப்பதுமே புருஷார்த்தமென்ற பொய்நின்ற ஞானத்தைக் கொடுத்து ஸம்ஸாரத்தில் கிடந்து தபித்துக்கொண்டிருக்கும்படியும், இன்னும் மற்றும் உலகத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் விசித்ர அவஸ்தைகளுக்கு உள்ளாக்கிப் பல ஜன்மங்களை எடுத்துக் கஷ்டப்படும்படியும் செய்கிறது. இந்த விரோதிகளைப் போக்க நல்ல ஆசார்யர்களை அடைந்து நம் கெடுதல்களைத் தெரிந்துகொண்டு நம்மாழ்வாரும் பூர்வாசார்யர்களும் கதறினாற்போல் நம்ம பாபத்தை எண்ணி எப்பொழுதும் ஈச்வரனை நினைத்து மனம் தளர்ந்து உருகினால் ஈச்வரன் கிருபை கூருவான்.

ஆகையால், நம் தேகத்தைத் தவிர வேறு ஆத்மா ஒன்று இருக்கிறதென்றும், இந்த ஆத்மா அடையவேண்டிய இடம் பரமபதமென்றும் அதற்கு உபாயம் நல்ல ஆசார்யர்களைச் சேர்ந்து, இத்தனைநாள் ஈச்வரனை அடையாமல் தடுத்துக்கொண்டிருந்த விரோதிகளைத் தெரிந்துகொண்டு அவற்றை விலக்கி அவ்வாசார்யர்கள் மூலமாய்ப் ப்ரபத்தி செய்து க்ருதக்ருத்யனாகவேண்டுமென்றதாயிற்று. இந்த ஐந்து ஸங்கதிகளும் மனதிற்பட்டால் மனுஷ்ய ஜன்மம் க்ருதார்த்தமாகும். இவை மனதில் எப்பொழுதும் நிலைபெற்றிருந்தால், ஜீவன உபாயத்திற்காக எந்தத் தொழிலைச் செய்தாலும் பாதகமில்லை. பிறர் எவ்விதமான கோபம் உண்டாகக்கூடிய வார்த்தைகளைச் சொன்னாலும் மனஸ்தாபம் ஏற்படாது. எல்லாருடனும் ப்ரியமாய்ப் பேசிக்கொண்டும் வணக்கமாயிருந்துகொண்டுமிருப்பதில் ருசியுண்டாகும். இதனால் மனது மிகவும் ஸந்தோஷமாயும் எவ்வித கஷ்டங்கள் வந்தாலும் கவலையில்லாமலுமிருக்கும். இவ்வுலகத்தில் உள்ள நாள்வரையில் ஸௌக்யமாயும் பிறருக்கு உபகாரகமாயும் இருந்து பிற்பாடு மோக்ஷத்தையும் அடையலாம்,

ஸ்ரீ. உ. வே. வேதாந்த தீபிகை பத்திராதிபருக்கு விஜ்ஞாபனம். நிகழும் ஆவணிமாதத்திய தீபிகையைப் பார்த்தேன். அதில் கும்பகோணம் ஸ்ரீ உ. வே. கே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி மதப்ரஷ்ட ப்ராயச்சித்த விஷயமாய்ச் சில சொற்களை எழுதி இருக்கிறார். அதில் ஆவச்யகமான சிலவற்றிற்கு இதின்மூலமாய்ப் பதிலளிக்கிறேன்.

அதில் முதலில் வாஜபேயம் ஸ்வாமி பொதுவாய் எழுதி இருக்க, அடியேன் வ்யக்தியைக்குறித்து எழுதி இருப்பது தப்பென்றும், இரண்டாவது அந்த வ்யக்தியையும் அவர் அந்தஸ்தையும் அவர் படிப்பையும் நோக்காமல், அவன், இவன் என்று பேசியிருப்பது தப்பென்றும் திருவுள்ளம் பற்றுகிறார். இவைகள் ஆபாதமாகப்பார்த்தால் தப்புகளாகத் தோன்றலாம். ஆனாலும் அடியேன் புத்திபூர்வகமாய் அந்த வ்யக்தியை நிர்த்தேசிப்பதில் நோக்கோடு எழுதவில்லை. அடியேனுக்குப் பாபத்தில் நோக்கேயொழிய வ்யக்தியில் நோக்கில்லை. அவரை நான் இன்னபடியுள்ளவரென்று ஒரு ப்ரகாரத்தாலு மறிந்தவனுமன்று. ஆனால் இத்தகைய பாபம் புத்திபூர்வகமென்று நன்கு நிரூபிக்கவேண்டியதற்காகவும் மஹானான வாஜபேயம் ஸ்வாமி இந்த விஷயத்தில் எழுதியது பக்ஷபாதமாகக் காணப்படுகிறது என்று தெரியப்படுத்துவதற்காகவும் அப்படிக் குறித்தேனேயல்லது அந்த வ்யக்தியை எள்ளளவேனும் நிந்திக்கக் கருதினேனல்ல. இது என்னுடைய உண்மையான வார்த்தை. வேதாந்த தீபிகையை யூன்றி நோக்கினால் அடியேனுக்கு எதில் நோக்கென்பது விசதமாகும். ஸ்ரீநிவாஸாசாரியர் போன்ற பல மத்யஸ்தர்களுக்கும் இது பிசகு என்றுபட்டால் எல்லோரும் இதைக்ஷமிக்கவேண்டுமென்று தீபிகை மூலமாய்ப் பிரார்த்திக்கின்றேன். இதுநிற்க—

ப்ராசீநர்கள் தேவல வசனங்களாக எடுத்தவைகளில் ஒரு சகலமும் இந்தத் தேவலஸ்மிருதியில் இல்லாமலும், இதிலுள்ள வசநங்களை யொருவருமெடுக்காமலுமிருந்தால், இது எப்படி மன்வாதி ஸ்மிருதியோடொக்கும்? ஒன்றிரண்டில்லாவிடில் ஸந்தேகத்துக்கிடமுண்டு. இதை மத்யஸ்தர்கள் நன்கு கவனிக்கவும்.

ஹாரீதாதிகள் சொன்ன பிராயச்சித்தமும் தன் மதத்திலேயே இருந்து நாஸ்திகவிருத்தியாய்ப்போன மஹாபாதக நாஸ்திகனுக்குத்தான் என்பதுதான் அடியேனுடைய அபிப்பிராயமென்பது தீபிகையை நன்கு நோக்கினால் விசதமாம். வாஜபேயம் ஸ்வாமி மதப்படிக்கும் இவ்வித நாஸ்திகன் மஹாபாதக நாஸ்திகனென்றே கொள்ளவேண்டுமென்றும், அவனுக்கு ப்ராயச்சித்தம் துர்க்கடமென்றும் எழுதி இருப்பதையும் நன்கு கவனிக்கவும்.

இ. ரங்கநாதாசார்யர்.

ஸம்வத்ஸரமுடிவில் விஜ்ஞாபனம்.

இத்தீபிகை ஆரம்பித்துப் பதினைந்து வருஷங்கள் இந்த ஸஞ்சிகையுடன் பூர்த்தி ஆயின. பதினைந்தாவது ஸம்புடத்தை ஒன்று சேர்த்துப் பைண்டு செய்துகொள்ள முகபத்ரமும் அட்டவணையும் அச்சிட்டு இத்துடன் அனுப்பப்பட்டிருக்கின்றன. நம்முடைய மதத்தின் அபிமானத்தால் ஸபையின் மெம்பர்களாக ஆகி ஒத்தாசை செய்துவந்த எல்லா ஸ்வாமிகளுக்கும், தீபிகைக்கு விஷய ப்ரதானம் செய்துவந்த எல்லா வித்வான்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதையை வந்தன பூர்வகமாய்த் தெரிவிக்கிறேன். இந்த ஒத்தாசையை ஒவ்வொருவரும் யாவஜ்ஜீவம் செய்துவரும்படிக்கும், இன்னும் தங்களுடைய ஸ்நேஹிதர்களையும் ஸபையின் மெம்பர்களாகச் சேரும்படி யத்னம் செய்யும்படிக்கும் விநயத்துடன் ப்ரார்த்திக்கிறேன். ஒவ்வொரு மெம்பரும் ஒரு ஸ்வாமியை யாவது மெம்பராகச்சேர்த்துக் கொடுக்கும்படி ச்ரத்தையை எடுத்துக்கொண்டால் ஸபை நிரம்ப முன்னுக்கு வந்துவிடும்.

காரியதர்சி.

ச்ருதி ப்ராமாண்யம்.

(ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி, பி. ஏ.)

ப்ரளயகாலத்தில் சப்தத்திற்கு ஆதாரமான ஆகாசமும் தனது காரணமாகிய ப்ரக்ருதியில் லயித்திருக்கும்போது, இன்னும் அதிக ஸூக்ஷ்மமாயுள்ள வேதமானது இன்னும் அதிக ஸூக்ஷ்மமான காரணாவஸ்தையை யடைந்து ப்ரக்ருதியில் கேவலம் மக்னமாய் (அடங்கி) இருந்தபடியால், அந்தக்காலத்தில் பரம ஸூக்ஷ்மாவஸ்தையைப் பெற்ற வேதத்தை மற்றவர்கள் காணமுடியாது. ஜகத்காரணனும் புருஷோத்தமனுமான ஸ்ரீமந் நாராயணன் ப்ராக்ருத ப்ரளயத்தின் முடிவில் அதற்கு முன்னிருந்த ஜகத்தின் அவயவ அமைப்பை ஸ்மரித்து "ப³ஹு ஸ்யாம்" (பஹுவாக ஆகிறேன்) என்று ஸங்கல்பித்துத் தன்னிடத்தில் சக்தி மாத்ராவசேஷமாய் லயித்திருக்கும் (அசேதனங்கள் சேதனங்கள்) யாவற்றையும் பிரித்து மஹத் தத்வந்தொடக்கமான ப்ருஹ்மாண்டத்தை ஹிரண்யகர்ப்பன் வரையில் முன்போலவே ஸ்ருஷ்டித்து, பூர்வபூர்வமான ஆநுபூர்வி விசேஷத்துடன் (வரிசைக்ரமத்துடன்) முன்பின் கிரமத்துடனிருக்கும் வேதங்களை வெளியாக்கி ஹிரண்யகர்ப்பனுக்கு உபதேசம் பண்ணி, முன்போலவே தேவாதி ஆகாரங்களோடு கூடிய ஜகத்தின் ஸ்ருஷ்டியில் அவரை நியமித்துத் தானும் அவருக்கு அந்தராத்மாவாக இருந்தார். இதைத்தான் "யோ ப்³ரஹ்மாணம் வித³தா⁴தி பூர்வம் யோ வை வேதா³ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" 'ஸ்ருஷ்ட்வா ப்³ரஹ்மாணமக்³ரதஸ்ஸ்வயம் வேதா³னுபதி³ஶ்ய ச விஶ்வஸ்ய ஸ்ருஷ்டௌ நியுஜ்ய ததந்தர்யாமீ...' என்கிற சுருதிகளும் ஸ்மிருதி வசநங்களும் சொல்லுகின்றன.

இப்படி ஸ்ரீமந் நாராயணனிடமிருந்து உபதேசம்பெற்ற ப்ரஹ்மா, அவரால் ஏவப்பட்டு லோகங்களையும் ப்ரஜைகளையும் மற்ற எல்லா வஸ்துக்களையும் வேதசப்தங்களைக்கொண்டே ஸ்ருஷ்டித்தார். 'வேத³ஶப்³தே³ப்⁴ய ஏவாதௌ³ நிர்மமே ஸ ப்ரஜாபதி:' (ப்ரஜாபதியானவர் சித் அசித் ரூபங்களை வேதசப்தங்களைக்கொண்டு நானாவிதங்களாகச் செய்தார்) 'ஸ பூ⁴ரிதி வ்யாஹரன் ஸ பூ⁴மிமஸ்ருஜத; ஸ பு⁴வ இதி வ்யாஹரன் ஸோ(அ)ந்தரிக்ஷமஸ்ருஜத' (அவர் பூ⁴: என்று சொல்லிப் பூமியை ஸ்ருஷ்டித்தார். பு⁴வ: என்று சொல்லி அந்தரிக்ஷத்தை ஸ்ருஷ்டித்தார்). 'வாத இதி

ப்ரஜாபதி: தேவாநஸ்ருஜத, அஸ்ருக்ரம் இதி மநுஷ்யாந், இந்தவ இதி பித்ரூந், திர: பவித்ரம் இதி க்ரஹாந், ஆசவ இதி ஸ்தோத்ரம், விச்வாநி இதி சஸ்த்ரம், அபிஸௌபகேத்யந்யா: ப்ரஜா:’ (ஏதே என்பதினால் இந்திரன் முதலியவர்களின் ஆக்ருதிகளை ஸ்மரித்து அவர்களையும், அஸ்ருக்ரம் என்னும் பதத்தைக்கொண்டு மனுஷ்யர்களையும், இந்தவ: என்னும் பதத்தைக்கொண்டு பித்ருக்களையும், திர: பவித்ரம் என்பதைக்கொண்டு க்ரஹங்களையும், ஆசவ சப்தத்தைக்கொண்டு கீதி ரூபங்களான ஸ்தோத்ரங்களையும், விச்வ சப்தத்தைக்கொண்டு சஸ்த்ரங்களையும் அபிஸௌபக என்னும் சப்தத்தினால் மற்ற ஸௌபாக்யங்களையுடைய ப்ரஜைகளையும் ஸ்ருஷ்டித்தார்). ஸ மநஸா வாசம் மிதுநம் ஸமபவத்’ (அவர் வேதத்தால் ப்ரகாசிக்கப்பட்ட ஸ்ருஷ்டியை மனதால் நினைத்தார்) என்கிற ச்ருதி வாக்யங்களாலும், ‘அநாதி நிதநா நித்யா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா । ஆதௌ வேதமயீ திவ்யா யத: ஸர்வா: ப்ரவ்ருத்தய: ॥’ ஸர்வேஷாம் து ஸ நாமாநி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக் । வேதசப்தேப்ய ஏவாதௌ ப்ருதக் ஸம்ஸ்தாச்ச நிர்மமே ॥ நாமரூபம் ச பூதாநாம் க்ருத்யாநாம் ச ப்ரபஞ்சநம் । வேதசப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாம் சகார ஸ: ॥ என்றிவை முதலிய மனுபராசராதி வசனங்களாலும், வேத சப்தங்களைக்கொண்டே ஜகத்ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்று ஏற்படுகிறது. லௌகிக சப்தங்கள் யாவற்றும் வேதராசியிலிருந்து ஏற்பட்டு அந்தந்த அர்த்தத்தைப் போதிக்கும்படியாய் முன்போலவே ப்ரயோகிக்கப்பட்டுப் பரம்பரையாக வழங்கிவருகின்றன. ஆனால் எல்லா சப்தங்களும் வைதிக சப்தங்களாமாயின் ‘சந்தஸ்யேவம் பாஷாயாமேவம்’ (வேதத்தில் இந்த சப்த ஸ்வரூபம் இவ்விதம், லௌகிகபாஷையில் இவ்விதம்) என்று தனித்தனியாக லக்ஷணம் சொல்லப்பட்டிருப்பது எதனால் என்றால் அந்த வைதிகசப்தங்களுக்கே, ச்ருதியிலிருக்கும் முன்பின் கிரமத்தில் ஆனுபூர்வியிலிருப்பவைகளுக்கு வைதிக சப்தலக்ஷணம் என்றும், இல்லாவிடில் லௌகிக சப்த லக்ஷணம் என்றும் தாத்பர்யம்.

ஆகையால் ப்ரளயகாலத்தில் ஸூக்ஷ்ம ரூபமாய்ப் பரமாத்மாவினிடத்தில் வேதமானது இருக்கிறது. பிறகு முன் கல்பத்திலிருந்தபடியே அபிவ்யக்தமாகிறது என்று ஏற்பட்டது. ஒவ்வொரு கல்பத்திலும் இதே மாதிரியாக இருந்தது. ஒவ்வொரு கல்பாரம்பத்திலும் அதற்கு முன்னிருந்த அக்ஷர

க்ரமத்தோடு ஸூக்ஷ்மரூபமாயிருந்த வேதத்தைப் பகவான் உபதேசத்தால் அபிவ்யக்தமாக்குகிறார். ஆகையால் வேதத்திற்கு ஆதியே இல்லையென்று விசித்தமாயிற்று. இனிமேல் வரப்போகிற ப்ரளயங்களிலும் ஸூக்ஷ்மரூபத்தையடைந்து மறுபடியும் ஸ்தூலரூபத்தையடையப்போவதால் அந்தமுமில்லையென்றதாயிற்று. ஆகையாலன்றோ ஆதியந்தமில்லாத சுருதியானது பகவானைப் போல் நித்யமென்று சொல்வது. ஆனதால் சுருதி நித்யமேயல்லால் அநித்யமல்ல. ஒருவராலும் உண்டாக்கப்படாததால் அபௌருஷேயமென்றதாயிற்று.

வேதம் அபௌருஷேயம்.

கீழ்க்கூறிய ப்ரமாணங்களால் வேதம் அபௌருஷேயம் என்பது விசித்தாலும், சிலர் நம்மைப்பார்த்து “வேதம் மனிதனால் ஏற்பட்டதல்ல” என்பதை வைதிகர்களாகிய நீங்கள் ருசுப்படுத்துங்கள்” என்று கேட்கிறார்கள். இப்படிக் கேட்பது சரியல்ல, நாகரிகமுள்ள எந்த ராஜாங்கத்திலும், நியாயஸ்தலங்களிலும் இம்மாதிரியான வாதம் செல்லாது. “நான் யாதொரு குற்றமும் செய்யவில்லை, யாதொரு கடனும் வாங்கவில்லை” என்று ஒருவன் சொன்னால், அவன் குற்றம் செய்ததாயும், கடன் வாங்கியதாயும் யார் ருசுப்படுத்தவேண்டியது? குற்றம் சாட்டுகிறவனும் கடன் கொடுத்ததாகச் சொல்லுகிறவனுமல்லவோ ருசுப்படுத்தவேண்டும்? அப்படிக்கல்லாமல் “நீ குற்றம் செய்யவில்லையென்றும் கடன் வாங்கவில்லையென்றும் “நீதான் ருசுப்படுத்த வேண்டுமென்று சொல்லத்தகாது. அதுபோல் வேதம் மனிதரால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லுகிறவர்கள், எக்காலத்தில் எந்த மனிதரால் உண்டாக்கப்பட்டதென்பதை ருசுப்படுத்த வேண்டிய பாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள் அப்படி அவர்கள் ருசுப்படுத்தாமற்போனால் வேதத்தின் அபௌருஷேயத்வம் த்ருடமாயிற்று. இதுவரையில் எவரும் வேதபௌருஷேயத்வத்தை ருசுப்படுத்தவில்லை.

வேதம் பௌருஷேயம் என்னும் வாதம்.

வேதம் மனிதரால் ஏற்படுத்தப்பட்டதென்று வேதவாக்யங்களைக்கொண்டே ஸ்தாபிக்கமுடியும்.

(1) சில வேதமந்திரங்களுக்கு ரிஷி - சந்தஸ் - தேவதை இவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ‘இமம் மே வருண’ என்கிற யஜுர் மந்த்ரத்திற்கு சுநச்சேபர் ரிஷி என்றும்; இதுபோல மற்ற ஒவ்வொரு மந்திரங்களுக்கும் ரிஷியின் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தந்த மந்திரங்கள் அந்தந்த ரிஷிகளால் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

) தவிர, காடகம், தைத்திரீயம் என்று வேதபாகங்களின் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடரால் சொல்லப்பட்டது காடகமென்றும், தித்திரியால் சொல்லப்பட்டது தைத்திரீயமென்றும், ‘தேநப்ரோக்தம்’

என்கிற பாணினி ஸூத்ரத்தால் [illegible] என்னும் உருபின் அர்த்தம் ஏற்படுகிறது ' தித்திரிணா ப்ரோக்தம் அதீயதே விதந்தி வா தைத்திரீயா: ' தித்திரியால் சொல்லப்பட்டதை அத்யயனம் செய்கின்றவரோ அல்லது அறிகின்றவர்களோ தைத்திரீயர்கள். என்று சொல்லப்படுகிருர்கள்.) ஆகையால் காடகம், தைத்திரீயம், கௌமுதம் முதலிய ஸகலவேதபாகங்களும், 'வ்யாஸேந ப்ரோக்தம், வையாஸிகம் ' (வ்யாஸரால் சொல்லப்பட்டது, வ்யாஸ புத்ரரால் சொல்லப்பட்டது) என்பதுபோல அந்தந்த மனிதர்களால் செய்யப்பட்டன. காளிதாஸர் முதலியவர்களால் செய்யப்பட்ட வாக்யங்கள்போல அவைகளும் வாக்கியங்களானதால் அவைகள் புருஷநிர்மிதங்கள்.

(3) மேலும் சுருதியில் கண்டோக்தமாய் (மறைபொருளின்றி நேராய்) ' மந்த்ரக்ருதோ வ்ருணீதே ' (மந்திரஞ்செய்தவர்களை வரிக்கிறுன்) நம ருஷிப்யோ மந்த்ரக்ருத்ப்ய: ' (மந்திரங்களைச்செய்த ரிஷிகளுக்கு நமஸ்காரம்) ' ஏதம் ஹோ ஸ்ம ருஷி விஶ்வாமித்ரஸ்ய ஸூக்தம் பவதி ' (இது விச்வாமித்ரருடைய ஸூக்தம்) என்றிவை முதலிய வாக்யங்களால் ரிஷிகள் மந்த்ரங்களைச்செய்தவர்களென்றும், காண்டங்களைச் செய்தவர்களென்றும் ஸூக்தங்களைச் செய்தவர்களென்றும் வ்யக்தமாய்த் தெரியவருவதால் அவையெல்லாம் மனிதர்களால் செய்யப்பட்டன ' என்று.

வேதபௌருஷேயத்வ வாத கண்டனம்.

(1) ஒவ்வொரு மந்த்ரத்தின் அனுஷ்டானகாலத்தில் அந்தந்த ரிஷிகளின் பெயரைச் சொல்லுகிறுமென்பதினுலேயே அந்த மந்திரங்களைப் புதிதாய்ச் செய்தார்கள் என்கிற அர்த்தம் ஏற்படாது. அந்த மந்திரங்களை அவர்கள் முறைதவறுமல் அப்யாஸம் செய்து ஸித்திபெற்ருர்கள் என்றுமட்டுமே தாத்பர்யமாதலால் அவர்கள் அவைகளைப் புதிதாய்ச் செய்தவர்களல்ல. ஆனுல் அவர்களின் பெயர்களைச் சொல்லுவது, அந்தந்த மந்த்ரங்களுக்கு மிகுந்த ப்ரபாவம் இருக்கிறதென்றும் அந்தந்த மந்த்ரஸித்தியைப்பெற்று அவரவர்கள் மஹிமையையடைந்தார்களானதால் அந்தப்படியே பிறரும் மந்த்ரத்தை அப்யஸித்துப் பெருமையை யடையவேண்டுமென்ற எண்ணத்துடனும் அவர்களின் நாமத்தைச் சொல்லும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்ராமாயணம் முதலியவற்றில் ப்ரஸித்தரான சுநச்சேபர், ஒரு ராஜா செய்த யாகத்தில் நரபசுவாக அகப்பட்டுக்கொண்டு விசுவாமித்ரர் உபதேசித்த மந்த்ரத்தால் வருணனை உபாஸித்து அதனுல் தனக்கு வந்திருந்த ஆபத்தினின்றும் விடுபட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர, ரிஷி ஜ்ஞானபூர்வகமாக மந்திரானுஷ்டானம் செய்யவேண்டியதென்றும் அப்படிச் செய்யாவிடில் தோஷம் உண்டு என்றும் சுருதியே சொல்லுகிறது. ' யோ ஹ வா அவிதிதார்ஷேயச்சந்தோ தைவத ப்ராஹ்மணேந மந்த்ரேண யாஜயதி வாऽத்யாபயதி வா ஸ்தாணும் வர்ச்சதி

கர்த்தம் வா பத்யதே ப்ர வா மீயதே பாபீயாந் பவதி யாதயாமாந்யஸ்ய சந்தாம்ஸி பவந்தி - அத யோ மந்த்ரே மந்த்ரே வேத, ஸ ஸர்வமாயுரேதி ஶ்ரேயாந் பவதி அயாதயாமாந்யஸ்ய சந்தாம்ஸி பவந்தி தஸ்மாதேதாநி மந்த்ரே வித்யாத் ' (மந்திரங்களின் ரிஷி சந்தஸ்தேவதை இவைகளை யறியாமல் ஒருவன் தான் யாகம் செய்தாலும், பிறருக்குச் செய்வித்தாலும், பிறருக்கு அத்யயனம் செய்வித்தாலும், அவன் ஸ்தாணுவாக (கட்டையாக) ஆகிருன். அல்லது படுகுழியில் வீழ்கிருன், நாசத்தையடைகிருன் மஹாபாபியாகிருன். அவன் செய்த அத்யயனம் பயனற்றுக் கார்யகரமாகிறதில்லை. ஆனுல் எவனொருவன் ஒவ்வொரு மந்த்ரத்திலும் அவைகளை அறிந்து செய்கிருனே அவன் தீர்க்காயுஸ்ஸாய்ப் பெருமைபெற்று, அத்தியயநத்தின் பயனைப்பெருகிருன். ஆகையால் மந்த்ரங்களில் ரிஷி சந்தஸ்தேவதைகளை அறிந்து அனுஷ்டானம் செய்யவேண்டும்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(2) மேலும் ' தேந ப்ரோக்தம் ' என்பதற்கு அவர்களால் புதிதாய் உண்டாக்கப்பட்டது என்று அர்த்தமல்ல, ஆனுல் ப்ர—உக்த என்று சிஷ்யர்களின் புத்தியில் நன்ருய்ப் பதியும்படியாக உபதேசித்துப் பரவச்செய்யப்பட்டது என்றே அர்த்தமாதலால் விரோதமில்லை. காளிதாஸர் முதலியவர்களின் க்ரந்தங்களின் அந்தந்த ஸர்க்கத்தின் முடிவில் கிரந்தகர்த்தாக்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அதுபோலவே வேதம் புருஷநிர்மிதமாயிருக்கும்பக்ஷத்தில் கர்த்தாவின் பெயர் காணப்படவேண்டாமா? அப்படி காணப்படுகிறதில்லையே! ஆகையாலும் வேதம் மனுஷ்ய நிர்மிதமல்லவென்றதாயிற்று.

(3) தவிர மந்த்ரக்ருத்துக்கள், ஸூக்த க்ருத்துக்கள், (மந்த்ரம் செய்தவர்கள், ஸூத்ரம் செய்தவர்கள்) என்று ரிஷிகளைப்பற்றிச் சொல்லியிருப்பதற்குத் தாத்பர்யம் அறியப்படவேண்டும். அந்த ரிஷிகளுக்கு மந்த்ரக்ருத்வமாவது வேதாத்யயனம் செய்யாமலே க்ரமஸ்வரவர்ணம் முதலியவைகளில் தவறுதலில்லாமல் மந்த்ரங்களை அறிவது என்பதுதான். உண்மை என்னவென்ருல்!— ப்ரஜாபதியானவர் பகவானுல் ஏவப்பட்டு " மந்த்ரக்ருதோ வ்ருணீதே " முதலிய வேதசப்தங்களைக்கொண்டே அந்தந்த மந்த்ரம் ஸூக்தம் இவைகளைப் பார்த்த முன்னிருந்த ரிஷிகளுடைய ஆக்ருதிகள் சக்திகள் இவைகளைப் பராமர்சித்து அந்தந்த வ்யக்திகளை அந்தந்த சக்தியுடையவர்களாக ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டிக்கப்பட்ட ரிஷிகளை அந்தந்த மந்த்ரங்களைப் பார்ப்பதற்கு அநுகுணமான தபஸ்ஸுக்களைச் செய்யுங்களென்று ஏவினுர். இவ்விதம் ப்ரஜாபதியால் தத்தங்மந்த்ர ஸ்ம்ருதி பூர்வகமாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அந்தந்த நாம ரூபங்களை யடைந்து ப்ரவாஹ பரம்பரையாக வந்திருக்கும் கடர் வஸிஷ்டர் முதலிய ரிஷிகள், ப்ரஜாபதியால் கொடுக்கப்பட்ட சக்தியையுடையவர்களாய்த் தபஸ்ஸைச் செய்து, நித்ய ஸித்தங்களாயும், பூர்வ பூர்வ வஸிஷ்டாதிகளால் பார்க்கப்பட்டனவுமான மந்த்ரம் முத

ஷியவைகளைப் பூர்வகல்பத்தில் அத்யயனம் பண்ணப்பட்ட வேதமந்த்ரஜ் ஞானத்தை முன்னிட்டு, அத்யயனம் செய்யாமலே ஸ்வரவர்ணாதிகளில் தவறுதலின்றித் தர்சிக்கின்றார்கள். அப்படிப் பார்த்தவர்கள் மதுச்சந்தர் முதலியவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

காடகம் முதலிய சப்தங்களுக்கும் கல்பாதியில் ரிஷிகள் தபஸ்வினால் அடைந்த வேதபாகங்களைப் பிரவ்ருத்திப்பித்ததால் அப்பெயர்கள் வந்தனவென்றே சொல்லவேண்டும். வேறுவிதமாகச் சொல்லமுடியாது. கடரால் முதலில் சொல்லப்பட்டதென்பது சரியல்ல. வேறொருவேஷயத்வம் சொல்லுகிறவனும் அப்படியே சொல்லுகிறான். தவிர, ஈச்வரனால் சொல்லப்பட்டதென்பதற்கு விரோதம் வருகிறது. அல்லது கடாதிகள் ப்ரவசனம் செய்ததால் காடகம் முதலிய பெயர்கள் வந்ததென்றாலும் சரியல்ல. ஏனென்றால் இந்தக் காலத்தில் ப்ரவசனம் செய்கிறவர்களின் பெயர்களும் அந்த வேதபாகங்களுக்கு வரக்கூடும். தவிர கடர் முதலியவர்களுக்கு முன்பு ப்ரவசனம் செய்தவர்களின் பெயர்களும் வந்திருக்கவேண்டும். ஆனால் அவ்விதம் வரவில்லை. கடருக்கு முன்னிருந்தவர்கள் அநேக சாகாத்யயனம் செய்தவர்கள். கடாதிகள் ஒரே சாகையைமட்டும் அத்தியயனம் செய்தார்கள். ஆதலால் ஏகசாகாத்தியயனம் செய்த கடாதிகள் பெயர்மட்டிலும் வழங்கிவருகிறது என்றும் சொல்லமுடியாது; ஏனெனில் கடாதிகளுக்கு முன்னிருந்தவர்கள் அநேக சாகாத்யயனம் செய்தார்களென்று தீர்மானமாய்ச் சொல்வதற்கு ப்ரமாணமில்லை. த்ருஷ்டத்திற்கு விரோதமாய்க் கற்பிப்பது அனுசிதம். அல்லது கல்ப ஆதியில் கடர் முதலியவர்கள் முதலில் ப்ரவசனம் செய்தார்கள் என்கிற காரணத்தால் அந்தப் பெயர் வழங்கி வருகிறதென்றும் சொல்லமுடியாது. ஏனென்றால் அந்தக்காரணம் ஜகந்நித்யம்' என்னும் பக்ஷத்திற்கு விரோதமானது. ஆதியான ப்ரவசனம் என்பதே கிடையாது. ஆகையால் காடகம் முதலிய வேதபாகங்களின் பெயர் வந்ததற்குக்காரணம் வேறு சரியானபடி சொல்ல முடியாததால் முற்கூறியபடி கடர் முதலிய மஹர்ஷிகள் தங்கள் தபஸ்ஸால், நித்யஸித்தமான வேதபாகங்களை யறிந்தார்கள் என்கிற காரணத்தாலேயே காடகம் முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன என்றே சொல்லவேண்டும். எனவே ரிஷிகள் மந்த்ரஞ் செய்தவர்கள் என்றும், வேதங்கள் நித்யங்கள் என்றும் சொல்வதில் யாதொரு விரோதமுமில்லையாதலால் வேதம் புருஷநிர்மிதமல்ல.

மேலும் த்ருஷ்டமான சில பலங்களைப்பற்றியே அதற்கு ஸாதனமான உபாயங்கள் மனிதன் புத்திக்கு எட்டுவதில்லை. நினைத்தபோது மழையை வரவழைப்பதற்கு உபாயத்தை மனிதன் தன்னுடைய புத்திபலத்தால் மனதால்கூட நினைக்கமுடியுமா? 'காரீரீ்யா வ்ருஷ்டி காமோ யஜேத' (மழை வேண்டுவோன் காரீரியாகம் செய்யவேண்டும்.) என்பதை மனுஷ்ய புத்தியால் எப்படிக்கண்டுபிடிக்க முடியும். விதிப்படி காரீரியாகம் செய்தால்

மழை நிச்சயமாய் வருவதென்பதைக் கண்டிருக்கிறார்கள். அதைப் பரமநாஸ்திகனும் மறுக்க முடியாது. த்ருஷ்டமான பலவிஷயத்திலும் மனிதனால் சிந்திக்கமுடியாத ஸாதனத்தை வேதம் சொல்லுகிறது. அவ்விதமே அத்ருஷ்டமான ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளின் ஸ்வரூபங்களையும் அவைகளையடைய உபாயங்களையும் வேதம் பிரதிபாதிக்கின்றது. வேதம் மனிதனால் செய்ப்பட்டதென்கிறபக்ஷத்தில் அதைச் செய்தவர் ஸ்வர்க்க மோக்ஷஸ்வரூபங்களையும் அவற்றின் ஸாதநங்களையும் எப்படி அறிந்தார்? ஒரு மனிதனால் அறியமுடியாததும் அடையமுடியாததுமான பலத்தையும் அதின் உபாயத்தையும் மற்றவர்களுக்கு உபதேசித்தான் என்றும், அதை மற்றவர்கள் நம்பி நடந்தார்கள் என்றும் சொல்வது மிகவும் பரிஹஸிக்கத்தக்கது. ஒரு பிறவிக்குருடன் வெளிச்சத்தின் ஸ்வரூபத்தையும் அதையடைய உபாயத்தையும் உபதேசித்தான் என்று சொல்லும் வாக்யம்போல் இதுவும் ஸ்வவசனவிரோதமாயும் அஸம்பவமாயுமிருக்கிறது.

அல்லது, பித்தன் பிதற்றுவதுபோல் அஸங்கதமாய் யாரோ ஒருவன் வேதத்தை எழுதிவைத்தான் என்று சொன்னால் அதுவுஞ் சரியல்ல, ஏனென்றால் வேதங்களில் சொல்லியிருக்கும் விஷயங்களைப் பார்த்தால் அந்த வாதம் ஒரு க்ஷணமும் நிற்காது; ஒவ்வொரு பல விஷயத்திலும் ஸாத்யஸாதன இதிகர்த்தவ்யதா (செய்யப்படவேண்டியது, செய்பவன், அங்கம்) ரூபமாய் அங்கோபாங்கங்களோடு கூடிய மிகவும் அத்புதமான அநேக காரியகலாபங்களும், அவற்றின் பலங்களும், வாக்கு மனதுகளுக்குக் கோசரமல்லாத பரப்ருஹ்ம ஸ்வரூபாதிகளும், ஜகத் ஸ்ருஷ்டி முதலியவைகளும், மயிர்க்கூச்சலுண்டாக்கும்படியான அழகிய ஸ்தோத்ர வர்ணநங்களும் அதி விசித்ரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. வெகு ப்ரயாஸத்துடனேயே ஸாதிக்கத்தக்கதாயும், அநேக புருஷர்களாலே அனுஷ்டிக்கப்படவேண்டியதாயும் ஒவ்வொரு சிறுவிஷயங்களிலும் மந்த்ர தந்த்ர ஸ்வரவர்ணாதி விவரங்களோடும் கூடிய ஜ்யோதிஷ்டோமம் என்றும் ஸோமமென்றும் இன்னும் பலவிதங்களான யாகங்கள் முதலியவற்றை ஒருபைத்தியக்காரன் விதித்தான் என்றும், அதைப்புத்திமான்கள் அநேகர் வெகுகாலமாய் அந்தபரம்பரையாய் அனுஷ்டித்துக்கொண்டு நெருப்பில் நெய்யைக் கொட்டித் தங்களுடைய சக்தி திரவ்யம் காலம் முதலியவைகளை வ்யக்தமாக்கினார்களென்றும் சொல்வதை உன்மத்தன் தவிர வேறு எவன் நம்புவான்?

அல்லது ஒருபுத்திமானான மனிதன் மற்றவர்களைவஞ்சிப்பதற்காக இவ்விதம் எழுதிவைத்தானென்றும் அதை நம்பிப் பின்வந்தவர்கள் ஏமாந்து அனுஷ்டித்து வந்திருக்கிறார்களென்றும் சொல்லத்தகாது. ஏனென்றால் முன்சொன்னபடி எவ்வளவு புத்திமானாக இருந்தாலும் அத்ருஷ்ட விஷயங்களைப்பற்றி ஒரு மனிதன் சொல்லமுடியாது. அந்தப்புருஷன் பிறரை வஞ்சிக்ககாரணமும் சொல்லமுடியாது' தவிர 'ஸத்யம்வத' 'தர்மம் சர' 'நஹிம்ஸ்யா

सर्वा भूतानि' (உண்மை பேசு, தர்மம் செய், எந்த ப்ராணியையும் ஹிம்ஸிக்காதே) என்பது முதலிய ஸாமாந்ய தர்மவிதி வாக்யங்களைப் பார்த்தால் ஸகல லோகத்தினுடைய நன்மைக்காகவே ஸர்வவேதங்களும் புறப்பட்டனவென்று ஏற்படுமே தவிர, ஜனங்களை வஞ்சிக்கப்புறப்பட்டனவென்று ஏற்படாது. காரீரி முதலியவைகளால் ஸாத்யமான த்ருஷ்டமான மழை முதலியவற்றுல் அத்ருஷ்டமான ஸ்வர்க்க மோக்ஷாதிகளும் அவற்றின் ஸாதனங்களும் உண்மையென்றே சொல்லவேண்டுமாதலால், ஆயிரம் தாய் தந்தையர்களைக்காட்டிலும் அதிக வத்ஸலையான சுருதியானது உண்மையை உள்ளபடி உரைப்பதாய் ஸமஸ்தஜகத்துக்கும் ஹிதத்தையே போதித்துக்கொண்டு அநாதிஸித்தமாயும் அபௌருஷேயமாயுமிருக்கிறதென்பதில் யாதொரு ஸம்சயமுமில்லை.

இப்படி ஸர்வவித்யாஸ்தானங்களுக்கும் மூலபூதமாயும், ஸத்யமாயும், நித்யமாயும், உள்ளபடி உண்மையுரைக்குமதாயிருக்கும் வேதமானது ஸர்வ ப்ரகாரத்திலும் ஸர்வவிஷயங்களிலும் ப்ரமாணம் என்பதையும், நமது பூர்விகர்கள் அநாதிகாலமாக க்ரந்தமூலமாயும், அநுஷ்டான மூலமாயும், உபதேச மூலமாயும் தெரிவித்து, ஸத்யவிஷயங்களில் ப்ராமாண்யசங்கை மற்றவர்களுக்கு நேர்ந்தகாலத்தில் வேதத்தில் சொல்லப்பட்ட 'दिव्यः' வாமஶாஸ்த்ரயமாகப் பந்தயங்களை நிர்வஹித்து ஸத்யத்தை நிலைநாட்டியிருக்கிருர்களென்பது பூர்விகர்களின் சரித்ரங்களால் தெரியவருகிறது. ச்ருதியைக்காட்டிலும், மேலான ப்ரமாணம் ஒன்றுமில்லையென்றும், அதனுல் ப்ரதிபாதிக்கப்படும் கேசவனைக்காட்டிலும் பரதத்வமில்லையென்றும் ஸத்யம் பண்ணும் தீர்மானத்தோடுகூட இரண்டுகைகளையும் உயரத்தூக்கிக்கொண்டு அநேக வித்வான்களின் கூட்டத்தில் சபதஞ்செய்து, 'सत्यं सत्यं पुनस्सत्यमुद्धृत्य भुजमुच्यते । वेदशास्त्रात् परम्' என்று வஸிஷ்ட புலஸ்த்ய வரப்ரஸாதத்தால் பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞானம் பெற்ற பராசரர் குமாரரும் பஞ்சமவேத கர்த்தாவுமான ஸ்ரீவேதவ்யாஸ பகவான் சொன்னார்.

आद्यन्तशून्याः पौरुषेयबुद्धिकृता न सृष्टिहेतवः नित्याश्चतस्रः संहितास्त्रिविधरचनायुताः संज्ञां त्रयीति । वेदा मन्त्रब्राह्मणरूपिणः ... स्वतः, सत्यं सत्यं च सत्यं पुनरिति जयभेरी विजिगीषाय तान्नदतु ॥
(ஆதியந்தமில்லாதவைகளையும், புருஷபுத்தியினால் செய்யப்பட்டதல்லவாயும், ஜகத்ஸ்ருஷ்டிக்குக்காரணமாயும், நித்யங்களாயும், நான்கு ஸம்ஹிதைகளுடனும் மூன்றுவித ரசனைகளுடனும் கூடியவையாயும் த்ரயீ என்று பெயர்பெற்றவையாயும், மந்த்ரம் ப்ராம்மணம் என்னும் ரூபங்களையுடையவையாயும், தோஷலேசமுமற்ற உயர்ந்த குணங்களையுடையவையாயும், பிறஉதவியின்றியே தாமே ஸ்வயமாகவே ப்ரமாணங்களாயிருக்கும் வேதங்கள். இது ஸத்யம், ஸத்யம், மேலும் ஸ்த்யம் என்று சொல்லிக்கொண்டே நமது ஜயபேரிகை முழங்கட்டும்).

ச்ராத்தம்.

(காடந்தேத்தி - கோபாலாசார்யர்.)

(தொடர்ச்சி.)

அதினுல் பிதிர்க்கள் த்ருப்தி அடைந்து ச்ராத்தம் செய்பவர்களுக்குப் புஷ்டியையும் ஸந்ததியையும் வ்ருத்தி செய்கிருர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. மாத்ஸ்ய புராணத்தில் (2) 'नाम गोत्रं पितॄणां तु प्रापकं हव्यकव्ययोः' ஹவ்ய கவ்யங்கள் பித்ரு தேவதைகளை அடைய நாமமும் கோத்ரமும் ஸ்ஹகாரிகாரண மென்றும் சொல்லப்பட்டுள்ளன.

ஸுகுணன்:— ச்ராத்தம் எத்தனைவிதம்? அதை விளங்கச்சொல்.

ஸுசீலன்:— நித்யம், நைமித்திகம், காம்யமென்று மூன்று வகைப்படும். மரணமடைந்த திதி, அமாவாஸ்யை மஹாளயம், இவை நித்ய ச்ராத்தம். (அதாவது செய்யாமல்போனுல் பாபம் உண்டாகும் என்றும், நக்னப்ரச்சாதன ச்ராத்தம் ஏகோத்தர வ்ருத்தி ச்ராத்தம், நவ ச்ராத்தம் முதலியவைகளும், மாஸப்ரவேசம், க்ரஹணம் இவைகளில் செய்யப்படும் ச்ராத்தமும் நைமித்திகம். அதாவது நிமித்தத்தாலேற்பட்டது. பிரதமை முதலான திதிகளிலும், அச்வினி முதலிய நக்ஷத்ரங்களிலும், மந்வாதி யுகாதி இவைகளிலும், விஷ்கம்பம் முதலிய யோகங்களிலும், ஸந்ததி, ஸௌபாக்கியம் முதலிய பலங்களை விரும்பிச் செய்யப்படும் ச்ராத்தம் காம்யம் என்று தெரிந்து கொள்ளவேண்டியது.

ஸுகுணன்:— சூத்ரர்கள் சிலவிடங்களில் அன்ன ச்ராத்தம் செய்கிருர்களே! அவர்களுக்கு அவ்விதம் பண்ணலாமென்று விதியுண்டோ?

ஸுசீலன்:— அவர்கள் ஒருபொழுதும் அன்னத்தால் ச்ராத்தம் செய்யலாகாது. (1) எப்பொழுது சூத்ரன் அமாவாஸ்யை முதலான ச்ராத்

---

2. मृताहे दर्शश्राद्धं यच्च महालये । तन्नित्यं प्रोक्तं सद्भिर्नित्यवद्विहितं ततः ॥ प्रेतश्राद्धं सपिण्डीकरणं संक्रान्तिग्रहणेषु च । संवत्सरादि कर्मं च वृद्धिश्राद्धं निमित्ततः ॥ तिथ्यादिषु च यच्छ्राद्धं नक्षत्रेषु योगेषु । सन्तत्यैश्वर्य भोगेषु तत्काम्यं समुदाहृतम् ॥

1. अमावास्यादिकं श्राद्धं यदा शूद्रः समाचरेत् ।
तदा पुरोहितेन होत्रा वा कारयित्वाऽन्नमयं सदा ॥
बोधायन स्मृतिः.

தங்களைச் செய்வனோ, அதை (ஆமத்தினல்) அதாவது அபக்வமான பதார்த்தத்தைக் கொண்டும், பணத்தாலும் ச்ராத்தம் செய்யலாமே யொழிய ஒருபொழுதும் அன்னத்தினல் செய்யக்கூடாது. (2) த்விஜர்களுக்கும் சிலவிடங்களில் ஆம ச்ராத்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. பத்னீ விலகி நிற்கும் பொழுதும், அன்னத்திற்குரிய ப்ராஹ்மணன் அகப்படாமற் போனபொழுதும், க்ரஹணத்திலும் ராஷ்ட்ங்களுக்கு க்ஷோபம் உண்டாகும் காலத்திலும் ச்ராத்தத்தை ஆமமாகச்செய்யக்கடவன். சூத்ரனேவென்ருல் எப்பொழுதும் ஆமச்ராத்தமேதான் செய்யக்கடவன். ஒரு பொழுதும் அன்ன ச்ராத்தத்திலதிகாரமில்லை.

ஸுகுணன்:— ச்ராத்தத்தில் உத்தேச்ய தேவதை ப்ராஹ்மணுதிஎல்லா வர்ணங்களுக்கும் ஓரே விதமா, அல்லது வெவ்வேறு? அதன் விவரத்தைச் சொல்வாயாக.

ஸுசீலன்:— (3) ப்ராஹ்மணர்களுக்கு, அக்னிஷ்வாத்தர்களென்பவர்களும் க்ஷத்ரியர்களுக்கு பர்ஹிஷதர்களென்பவர்களும், வைச்யர்களுக்கு காவ்யரென்பவர்களும், சூத்ரர்களுக்கு ஸுகாலிகளென்பவர்களும், ம்லேச்சர்கள், சண்டாளர் இவர்களுக்கு வ்யோமர்களென்றும் இவ்விதம் வர்ணங்களுக்குத் தகுந்தபடி பித்ருக்கள் வெவ்வேருகச் சொல்லப்பட்டிருக்கிருர்கள்.

ஸுகுணன்:— ஏகாதசி தினம் ச்ராத்த திதி வந்தால் அன்றையதினம் செய்கிறதா அதைவிட்டு மறுநாளில் செய்கிறதா?

ஸுசீலன்:— இந்த ஸந்தேகம் உண்டாவதற்குக் காரணம் என்ன?

---

2. [illegible] 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌭𑌾𑌵𑍇 𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌦𑍇𑌶𑌵𑌿𑌪𑍍𑌲𑌵𑍇 ।
𑌆𑌮𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌦𑍈𑌵 𑌹𑌿 ॥
𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌪𑌾𑌦𑌃.

3. 𑌅𑌗𑍍𑌨𑌿𑌷𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌬𑌰𑍍𑌹𑌿𑌷𑌦𑍋 𑌨𑌾𑌮 𑌵𑌿𑌶𑌾𑌂 𑌕𑌾𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥
𑌸𑍁𑌕𑌾𑌲𑌿𑌨𑌸𑍍𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌮𑌾𑌃 𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑌿𑌷𑍁 ॥
[illegible]

ஸுகுணன்:— (1) ஹரிவாஸரத்தில் போஜநம் செய்யலாகாது. போஜநம் செய் என்று எவன் சொல்லுவனே அவன் ப்ரஹ்ம ஹத்தி செய்தவனுக எண்ணப்படுவானென்று பெரியோர்கள் சொல்லுகிருர்களே.

ஸுசீலன்:— விதி நிஷேதங்களைத் தெரிந்துகொள்ளாதவனுயிருக்கிருய், ஏகாதசியையும் விடலாகாதுதான். ச்ராத்தத்தையும் விடலாகாது என்று இரண்டையும் அதிக்ரமித்தால் தோஷம் சொல்லியிருந்தாலும், (2) ஏகாதசி வ்ரத தினத்திலும் பித்ரு ச்ராத்தம் நேரிடுமாயின் நித்யோபவாஸியாயிருப்பவனும் ச்ராத்தம் செய்யவேண்டியது விதி பலத்தினல் ஏற்பட்டது. இந்த விதி உபவாஸவிதியைவிட ப்ரபலம். (4) ஜ்ஞானியாலும், அஜ்ஞானியாலும், மூர்க்கனுலும், பண்டிதனுலும் பித்ரு தினத்தை மறந்து ச்ராத்தம் செய்யாதவன் அநேக கோடி ஜன்மங்களில் சண்டாளனுவான் என்றும், ச்ராத்தம் செய்யாதவனுக்குத் தோஷம் கடுமையாய்ச் சொல்லப்பட்டிருப்பதினல் அவச்யம் செய்யவேண்டும்.

ஸுகுணன்:— ச்ராத்தத்தில் பக்ஷ்யபோஜ்யம் முதலியவைகள் பரிமாறும் விதம் எப்படி?

ஸுசீலன்:— பதார்த்தங்களைக் கையினல் எடுத்துப் பரிமாறக்கூடாது. கரண்டியினுலேயே ஸாதிக்கவேண்டியது. ஸம்ப்ரதாயபேதமுண்டு. நாம் அதில் தலையிடுவானேன். பெரியோர்கள் ஸம்ப்ரதாயத்தை இகழக்கூடாதல்லவா. கையினல் பரிவேஷணம் செய்வதும் சிலவிடங்களில் சாஸ்த்ரீயங்களாய்க் காணப்படுவதால் ஏகதேசத்தில் ப்ரமாணமாய் வைத்துக்கொள்ளலாம்.

---

(1) 𑌨 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌹𑌰𑌿𑌵𑌾𑌸𑌰𑍇 ।
𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵𑍇𑌤𑌿 𑌯𑍋 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 𑌸 𑌭𑌵𑍇𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌘𑌾𑌤𑌕𑌃 ॥

(2) 𑌉𑌪𑌵𑌾𑌸𑍋 𑌯𑌦𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌉𑌪𑌵𑌾𑌸𑌂 𑌤𑌦𑌾 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌘𑍍𑌰𑌾𑌯 𑌪𑌿𑌤𑍃𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 । 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃.

(3) 𑌏𑌕𑌾𑌦𑌶𑍀 𑌵𑍍𑌰𑌤𑌦𑌿𑌨𑍇 𑌚𑍈𑌵 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌮𑍃𑌤𑌂 𑌦𑌿𑌨𑌂 ।
𑌤𑌦𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍇𑌵 𑌤𑍁 ॥

(4) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌮𑍂𑌰𑍍𑌖𑌾𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌵𑌤𑍍𑌤𑌰𑌾𑌃 ।
𑌪𑌿𑌤𑍃𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌾𑌃 𑌕𑍋𑌟𑌿𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 ।

ஸு-குணன்:— நண்பா! மெழுகாதே. சாஸ்திரத்தில் உள்ளபடி சொல்லு. சிஷ்டாசாரத்தைப் பிறகு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸு-சீலன்:— ஆனால் சரி; (1) பக்வமான அன்னத்தையோ மற்றுமுள்ள வ்யஞ்ஜநாதிகளையோ கரண்டி முதலிய பாத்ரவிசேஷங்களை ஸாதகமாகவைத்துக்கொண்டு இலையில் பரிமாறவேண்டும். எண்ணெயில் பக்வமானதையும், பக்வமாகாத பழம் முதலானவைகளையும் ஒரு பொழுதும் கரண்டியால் எடுத்துப் பரிவேஷணம் செய்யலாகாது. கையினால் கொடுக்கப்பட்டதைச் சாப்பிடலாகாது. (2) கையினால ஸாதிக்கப்பட்ட பாணிதம் என்கிற கற்கண்டு, சர்க்கரை, சாகம், பால், உப்பு, நெய் இவைகளையும் வ்யஞ்ஜநங்களையும் புசித்தால் அன்றையதினம் உபவாஸமிருக்க வேண்டுமென்றும், எண்ணெய் நெய் முதலியவைகளையும், வ்யஞ்ஜநம் முதலியவைகளையும் ச்ராத்தத்தில் கையினால் கொடுக்கிறவன் நரகத்தையும், அதைச் சாப்பிடுகிறவன் பாபத்தையும்அநுபவிப்பான் என்றுஞ் சொல்லியிருக்கிறது. இரும்பு பாத்திரத்தில் ஸாதிக்கக்கூடாது. (3) இரும்பு பாத்திரத்தினால் ஸாதிக்கப்படுகிற அன்னத்தை சாப்பிடுகிறவன் ச்வாவின் மூத்ரத்தைச் சாப்பிடுகிறவனென்றும், கொடுக்கிறவன் நரகத்தை அடைவானென்றும் சொல்லியிருக்கிறது. இதை நினைத்து ப்ரமாண சரணரான ஸ்ரீதேசிகன் "இரும்பாலும் கையாலு மிட்டதெல்லாம்" பழுதென்று அருளிச்செய்திருக்கிறார்.

ஸு-குணன்:— ச்ராத்தகாலத்தில் எவர்கள் பார்வையை விலக்கவேண்டும்?

ஸு-சீலன்:— (4) ப்ரஸவித்தவள், ஆசௌசி, ப்ரேத ச்ராத்தத்தில் போஜநம் செய்தவர்கள் நாய் முதலானவை பார்க்கும் தீண்டும் சோறும் மற்றதும் நண்ணாச் சோறே. அந்த அன்னத்தைப் பிதிர்க்கள் புஜியார்கள். அஸுரர்களே புஜிப்பார்கள். இப்படியே ச்ராத்தத்திற்குத் தேசகால நியமங்களையும் சொல்லுகிறேன். (1) ஸ்வபாவமாகவே பரிசுத்தங்களான அரண்யம் முதலிய ப்ரதேசங்களிலும், புண்யநதீரங்களிலும், ஜநங்களில்லாத விவிக்தங்களான ப்ரதேசங்களிலும் செய்யப்பட்ட ச்ராத்தத்தால் பித்ருக்கள் திருப்தியடைகிறார்கள். (2) ச்ராத்தத்தில் கட்க மிருகத்தின் கொம்பினால் செய்யப்பட்ட பாத்திரம், நேபாளகம்பளம், எள் இவை மூன்றும் பரிசுத்திகரங்களாகச் சொல்லுகிறார்கள். அப்படியே சௌசம் அதாவது (மனச்சுத்தி, வெளிசுத்தி), கோபமில்லாமை, பரபரப்பில்லாமை இம்மூன்றும் மிகவும் ச்லாக்யமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மற்றோரிடத்தில் (3) பசும்பால், கங்கை ஜலம், தேன், வெண்பட்டு, கட்க மிருகக்கொம்பினாற் செய்த பாத்திரம், நேபாள கம்பளம், எள்ளு என்ற இவைகளேழும் பரிசுத்தி கரங்களென்று சொல்லப்பட்டன.

ஸு-குணன்:— இந்தக் காலத்தை அநுஸரித்துச் சொல்வதாகத் தெரியவில்லையே. கர்ணகடோரமாய்ப் பேசுகிறாயே. பெரும்பாலும் சிராத்ததினமே சிலருக்கு ஸந்தேகத்திலிருக்கிறது. கர்த்தா மந்த்ரம் சொல்லுவதையே காணோம். வாத்தியாரே சொல்லிக்கொண்டு போகிறார். எவர்க்கு நாளொன்றுக்கு 4 ச்ராத்தம் வரையில் பண்ணிவைக்கச் சக்தியிருக்கிறதோ அவருக்குத்தான் கௌரவம். மற்றவர்களை வைதிகப் பிச்சவென்கிறார்கள். 10 மணிக்குள் ஆகாமல் போனால் மோசம் போய்விடுகி

---

(1) [illegible]

[illegible] ॥

(2) [illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

(3) [illegible] ।

[illegible] ॥

---

(4) [illegible] ।

[illegible] ॥

(1) [illegible] ।

[illegible] ॥ 3-207.

(2) [illegible] ।

[illegible] ॥

(3) [illegible] । [2-235.

[illegible] ॥

கிறது. நம் தாய் தந்தையர்கள் நம்மைப்பெற்றெடுத்து வளர்த்ததற்கு க்ருதஜ்ஞதையை அநுஸந்திக்க இது ஒன்றுதான் இருக்கிறதென்று நினைக்காமல் பசியினால் பதறுகிறார்கள். இதுவும் காலவைஷம்யத்தால் குறைவடையும்போல் தோற்றுகிறது. இந்த நிலைமையில் நீ சொன்னபடி அநுஷ்டிக்கிறவர்கள் இக்காலத்தில் ஆரிருக்கப்போகிறார்கள். ஆச்சரியம்.

ஸுசீலன்:— அப்பா! அப்படிச்சொல்லாதே. இந்தக்காலத்திலும் மஹான்கள் சிலர், சாஸ்திரம் சொன்ன கட்டளையை மீறாது இன்னமும் அநுஷ்டித்து வரக்காண்கிறோம். அவர்கள் எள்ளளவும் தவறாமல் ஸ்நாநம், ஸந்த்தியாவந்தனம், ஔபாஸநம், வைச்வதேவம், பஞ்சமகாயஜ்ஞம், பகவதாராதநம் இவைகளையும் புராணாதி ப்ரவசநங்களையும் செய்து வருகிறார்கள். சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி ச்ராத்தத்திற்குப் பத்து தினம் முந்தியே இதற்குவேண்டிய உபகரணங்களை ஸம்பாதித்துத் தேச காலாதி நியமத்துடன் பித்ரு ச்ராத்தாதிகளைச் செய்கிறார்கள். அந்த மஹான்களின் பொருட்டு நமஸ்காரம்.

ஸுகுணன்:— அநேகமாய் நான் கேட்கவேண்டியதெல்லாம் கேட்டாய்விட்டன. ச்ராத்தத்தில் உபயோகிக்கவேண்டிய பதார்த்தங்களையும் சொல்வாயாக.

ஸுசீலன்:— வாழைகளில் எல்லாஜாதியும், பாகற்காய், குட்டப்புடல், கொத்தவரை, பலாப்பழம், தேங்காய், மாம்பழம், பாக்கு, சிறுகிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு இவைகள் ச்ராத்தத்திற்குரியன. (1) கோதுமை, உளுந்து, பயறு, எண்ணெய், தைலபக்வமான பதார்த்தம், தேன், பசுவின் பால் இவைகள் இல்லாமலும் ச்ரத்தையில்லாமலும் ச்ராத்தம் செய்யவேகூடாது. அப்படியே வர்ஜிக்கவேண்டிய பதார்த்தங்களாவன:— கத்தரிக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், ஸுரைசாகம், வேலங்காய், ஈருள்ளி, வெள்ளனி முருங்கக்காய், சுரைக்காய், சிறுவசளை, நிலப்பனை இவைமுதலியவைகளை விடவேண்டியது.

---

(1) [illegible]

(2) [illegible]

ஸுகுணன்:— இன்னும் என்னால் கேட்கப்படாதவைகள் எவையுண்டோ அவைகளையும் சொல்லிவிடுவாய்.

ஸுசீலன்:— இன்னும் சிலபொதுவான அம்சங்களைச் சொல்லுகிறேன். ச்ராத்தத்தில் நிமந்த்ரணம் பண்ணப்பட்டவன் நெடுவழி நடக்கலாகாது. நிமிந்த்ரிதன் வேதமோதலாகாது. ச்ராத்தத்தில் புஜித்தவன் அன்றையதினம் மறுபடி ஒன்றையும் சாப்பிடலாகாது. வேறு ஓரிடத்திலும் தானம் வாங்கக்கூடாது. ஓரிடத்தில் ஒப்புக்கொண்டு வேறிடத்தில் புஜிக்கலாகாது. நிமந்தரணத்துக்காக ஒருவனை வரித்து அவனை வரவேண்டாமென்று தடுத்தால் பாபமுண்டு ச்ராத்தத்தைச் செய்கிறவன் அந்யன்செய்கிற ச்ராத்தத்தில் புஜிக்கலாகாது. ஒரு குடும்பத்தில் ப்ராதாக்கள் பிரிவினையை அடைந்தார்களேயாகில் தனித்தனியாகவே ச்ராத்தம் செய்யவேண்டும். பித்ரு கார்யங்களையும் தேவகாரியங்களையும் முன்னிட்டுச் செய்யவேண்டும். ஊர்த்தவபுண்ட்ரம் தரித்துக்கொண்டு செய்யப்படும் ச்ராத்தம் கயாச்ராத்தத்துக்கு ஸமானமானது. வேதத்தில் விதிக்கப்பட்டதும், ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டவைகளுமான எல்லா கர்மங்களும் திருமண்காப்பைத் தரியாமல் செய்தால் ப்ரயோஜநமற்றவையாகின்றனவாகையால் ஊர்த்தவ புண்ட்ரங்களைத் தரித்தே செய்யவேண்டும். அதிலும் விசேஷமாக ச்ராத்த கர்த்தாவோ போக்தாவோ திருமண்காப்பைத் தரித்துக்கொண்டே ஸந்த்யா ஜபம் ஹோமம் இவைகளைச்செய்யவேண்டும். இன்னும் நாய், கோழி, பஹிஷ்டையான ஸ்திரீ, ப்ரஸவித்தவள், பாஷண்டி, ஸகேசையான விதவா ஸ்திரீ, கழுதை இன்னும் மற்றும் அபரிசுத்தமான பதார்த்தங்களைப் பார்க்கலாகாது. இப்படி சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நியமங்களோடே செய்யவேண்டும். (1) தேசநியமம் காலநியமம் பாத்ரநியமம் முதலிய நியமங்களோடே பித்ரு தேவதைகளைக் குறித்துச் செய்யப்படுகிற கர்மத்துக்கு ச்ராத்தமென்றபெயர் பொருந்தும் என்றும் அமரஸிம்மன் சொன்னான். அது சிலவிடங்களில் லோபித்தாலும் சிலவிடங்களில் மஹான்கள் விமர்சையாய் அநுஷ்டித்துவருகிறார்களென்று சொல்லத்துணியலாம். (2) சாஸ்திரத்தில் நிஷேதிக்

---

(1) [illegible]

(2) [illegible]

[illegible] (8 - [illegible] 275 - [illegible]

கப்படாத அந்நத்தைக்கொண்டு சாஸ்திரவிதிப்படி நல்ல ச்ரத்தையுடன் பிதிருக்களை உத்தேசித்து ச்ராத்தம் செய்தால் அது அநந்தமாய்ப் பரிண மித்து, எப்பொழுதும் பரலோகத்தில் பித்ருக்களின் அக்ஷயமான த்ருப்தி யின் பொருட்டு ஆகிறது என்று மனுகூறியிருக்கிறார். ஆகையால் ச்ரத்தைதான் இதற்கு முக்கியம்.

ஸுகுணன்:— உன்னிடத்தில் ச்ராத்தத்தைப்பற்றின அம்சங்களை விரிவாய்க் கேட்டேன், என் ஸம்சயம் நீங்கிற்று. இப்படி விஸ்தாரமாய் இவ் வளவு காலம் தெரிந்துகொள்ள ஸாவகாசமில்லாமலே போய்விட்டது. இனிமேல் இப்படியே சாஸ்திரம் சொன்னகட்டளையில் ச்ராத்தத்தைச் செய்து பித்ருக்களைத் த்ருப்தி செய்விக்கிறேன். இப்பேர்க்கொத்த உதவிபுரிந்த உனக்கு நான் செய்யும் ப்ரத்யுபகாரம் என்ன இருக்கிறது. ஒரு அஞ்சலிசெய்கிறேன்.

ஸுசீலன்:— ஸந்தோஷித்து, (1) ஒருவன் புத்திரனென்றாகவேணுமென்றால் மாத்ரு பித்ருக்கள் உள்ளவரையில் அவர்கள் வசநத்தின்படி நடந்து கொள்வது. அவர்கள் லோகாந்தரமடைந்த பிறகு ப்ரத்யாப்திக ச்ரா த்தம் செய்து பூரிபோஜநம் செய்வது, கயையில் பிண்டதானம் செய் வது இம்மூன்றினால் தான் புத்திரத்வம் ஸித்திக்கும். நாம் இருவ ரும் உயிருள்ளவரையில் மாதாபிதிருவாக்யபரிபாலநம் செய்தோம். ப்ரத்யாப்திக ச்ராத்தம் செய்துவருகிறோம். கயையில் பிண்டதானம் செய்யவேண்டியது மிகுதி. அதை இவ்விடத்தில் செய்வோமென்று சொல்லிக் கயையில் ச்ராத்தம் பண்ணிப், பிண்டதானம் செய்து பித்ரு கார்யங்களை நிறைவேற்றி ஸந்துஷ்டர்களாய் அம்ருத ஸரஸுக்கு வந்து ஸுகமாய் வாழ்ந்தார்கள்.

---

(1) ஜீவதோர்வாக்யகரணாத் ப்ரத்யப்தம் பூரிபோஜநாத் ।
கயாயாம் பிண்டதாநாச்ச த்ரிபி: புத்ரஸ்ய புத்ரதா ॥

ஸர்வேச்வர காருண்யம்.

(சிரோமணி, ஸ்ரீ. உ. வே. ஸ்ரீராமதேசிகாசார்யர்.)

(முன்தொடர்ச்சி.)

என்கிறபடியே சேதனன் தனக்கு ரக்ஷகன் யார் என்று தேடுங்கால் 'நான் இருக்கிறேன்' என்று தன்னுடைய க்ருபைக்கு பாத்ரமானவஸ்துவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஸர்வரக்ஷண தீக்ஷிதனை புரு ஷோத்தமன், காகத்தின் அபராதங்களை க்ஷமித்து போகமுயற்வீடு பெறப் பொன்னருள் செய்தான் என்கிற அந்த கருணாபாரவச்யத்தாலே தன்னையும் ரக்ஷிக்கவேணுமென்று, ஆழ்வான் 'பக்ஷம் க்ருதாகஸி விப்ருணக்தி ஸ்வஸ்தம் தம் வாயஸம் ஸாதயா தயயா க்ஷிதிஷ்டா: । தத்தேநவ ஸாத்ருஶஜநஸ்ய ஶமாஶ்ரயேஷு யத்தம் ஸமஸ்தஜந த்ருவயாஸ்யாதி' என்கிற ச்லோக முகத்தாலே ப்ரார்த்தித்தார்.

அன்றிக்கே ஜகந்மாதாவான பிராட்டியைக் கொண்டுவந்தபடியால் ஸ்ரீ ராமபத்ரனிடம் மஹாபராதியான ஸோதரனை ராவணனிடத்தில் ஹிதபரதை யால் விபீஷணன் 'யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம் பாலாதபி ஶுகாதபி' என்கிற ந்யாயத்தாலே தன் வார்த்தையை அங்கீகரிப்பன் என்னும் அபிநி வேசத்தாலே தத்வத்தை எடுத்துரைத்து 'ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ' என்று ஸீதையை ராமபத்ரனிடம் ஸமர்ப்பிக்கும்படி மிகவும் வேண்ட, அவனுடைய வார்த்தை செவிபடாதபடி ஸமீபத்திலிருக்கும் காலன் பிடரிதள்ளுவதினால் அந்தவழியே நடந்து ஸோதரனை திரஸ்கரிக்க, விபீஷ ணனும் 'ஸ்வாத்யாயவ தஸ்ய வயாசு' என்கிறபடியே இனி இவனுக் குபதேசிக்கவுமாகாது, 'வஸேத் ஸஹ ஸபத்நேந க்ருத்தேநாஶீவிஷேண ச । ந து மித்ரப்ரவாதேந ஸம்வஸேச் சத்ருஸேவிநா' (பகைவர் விமுகர்க ளுடன் ஸஹவாஸம் செய்வதிற்காட்டில் அக்னிஜ்வாலையின் மத்தியில் வஸி ப்பது ச்ரேஷ்டம்) என்கிறபடி இவனுடைய ஸாமீப்யமும் ஆகாது என்று நிர்மானித்து, ஸர்வேசுவரனை சரணம் புகக்கருதி, ஆகாசமார்க்கமாய் தன்னு டைய மித்ரர்களான நான்கு ராக்ஷஸர்களுடன் வருவதை ஸ்ரீராமபத்ரனி டம் இருக்கும் ஸுக்ரீவன் முதலிய வானரவீரர்கள் கண்டு, அவர்கள் தங் களை ஹிம்ஸிப்பதின் நிமித்தம் வருவதாய்க் கருதி, யுத்தத்திற்கு ஸந்நாஹம் செய்தவளவில், விபீஷணன் ஆகாசத்திலிருந்தே இதைப்பார்த்து உரத்தகுர லில் தன் வ்ருத்தாந்தத்தை இவர்களுக்கு அறிவித்து, ராமனிடம் விண்ணப் பம் செய்யும்படி ப்ரார்த்திக்க, அவர்களும் இவ்வாக்யத்தில் நம்பிக்கையற்ற வர்களாய் ராமனிடம் விண்ணப்பம் செய்து, இவன் சத்ருவிடமிருந்து வந்தவ னதலால் இவனை வதம் செய்யும்படி ஆஜ்ஞாபிக்கவேணுமென்று

186743

த்து, நியமனத்தை எதிர்பார்த்திருக்கையில், ஸ்வாமியும் அவர்களைப் பார்த்து ஆனுகூல்ய புத்தியுடன் என்னைச் சரணம்புகுந்தவனை ஒருக்காலும் கைவிடேனென்றுரைத்து, கபோதோபாக்யானத்தை உதாஹரணமாக்கி சரணாகத ரக்ஷணத்தின் ஆவச்யகதையையும் அவர்களுக்கு அறிவித்து 'ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே । அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥' என்று ஸர்வ பூதங்களிடமிருந்தும் அபயத்தை கொடுப்பதையே வ்ரதமாகக் கொண்டிருப்பதாய் இயம்பி 'பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச' என்றபடி ஸகல பந்துமித்ரர்களையும் விட்டு 'சேலேய்க்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையும் அவரேயினியாவாரே' என்கிறபடியே தன்னையே சரணமாகப்பற்றின ஸ்ரீ விபீஷணாழ்வானை ராமபத்ரன் அங்கீகரித்து, தன் கருணைநிறைந்த கடாக்ஷங்களுக்கு இலக்காக்கி, அவனுடைய ஸாஹாயத்தையும் கொண்டு தர்மயுத்தத்தை ப்ரவர்த்தித்தவாறே, 'ராகவோऽர்ஹதி வைதேஹீம் தம் சேயம் அஸிதேக்ஷணா' என்கிறபடி அநுரூப தாம்பத்யத்தாலே அழகுநிறைந்த பெருமாள் பிராட்டியின் திவ்யமங்கள விக்ரஹங்களின் சேர்த்திக்கு வியோகத்தை உண்டுபண்ணின 'சுரிகுழற்கனிவாய் திருவினைப்பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்' என்னும்படி அதிகடின ப்ரக்ருதியான ராவணனை அநேக தடவைளில் தோற்கடித்து அப்பொழுதாவது ஸீதையை ஸமர்ப்பித்தால் அவன் அபராதங்களை க்ஷமிப்பதாய் அவன்மீது கருணையால் வெளியிட, அவனும் ராமபத்ரனுடைய யுத்தஸாமர்த்யத்தைக் கண்டு வியந்து 'தம் மந்யே ராகவம் வீரம் நாராயணம் அநாமயம்' என்று ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனே எதிரில் நின்று யுத்தம் செய்வதாய்க் கருதிய போதிலும் 'ஆயயாஸ்வஹ்ருதஜ்ஞாநாம்' என்கிறபடி மறுபடியும் அஜ்ஞானமே வந்து தலைக்காட்டுதலால் யுத்தத்தை ஆரம்பிக்க ஆநுகூல்யைகத்ருஷ்டியான இராமபிரானும் தன்னுடைய திவ்யஹஸ்தங்களால் தொடுக்கப்பட்ட சரமாரியால் அவன் தலைகளைத்துணித்து, அவனுக்கு நல்லுலகங்களைக் கொடுத்தருளினபிறகு, மீதி ராக்ஷஸர்கள் தாங்கள் முன் செய்திருக்கும் அபராதங்களை நினைத்து தங்களையும் விண்ணுலகுக்கு அனுப்புவரென்று நடுங்கி இராமனைச் சரணம் புகுந்து முக்யாபராதி இராவணன்தான் என்றும் யஜமான பாரவச்யத்தினால் தாங்கள் அபராதப்பட நேர்ந்ததையும் 'தண்டகாரணியம் புகுந்தன்று தையலைத் தகவிலி யெங்கோமான் கொண்டு போய்ந்துகெட்டான் எமக்கிங்கோர் குற்றமில்லைக் கொல்லேல் குலவேந்தே' என்கிறபடி விண்ணப்பம் செய்து க்ஷமிக்கும்படி ப்ரார்த்தித்து எதிரில்

நின்று கூத்தாடிய வளவில் 'ராமோ த்விர் நாபிபாஷதே' என்கிறபடியே மெய்யல்லது விளம்பாத இராமபிரான் முன் 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்று ப்ரதிஜ்ஞை செய்ததற்கேற்ப பிறகு விபீஷணனுடைய விபூதிகளிற் சேர்ந்த அந்த ராக்ஷஸர்களையும் ரக்ஷித்தருளின வ்ருத்தாந்தத்தை ஆராய்ந்தால் ஆச்ரிதனிடமிருக்கும் கருணாப்ரவாஹம் ஸர்வேசுவரனாலும் நியமிக்க வொண்ணாதபடி கரைபுரண்டு இவனோடு ஸம்பந்தமுடைய திடர்நிலங்களிலுமேறிப்பாய்வதை நினைத்து 'ஸ்வதந்த்ரனுடைய க்ஷமையிலே ஊன்றிப் போரவடுக்கும்' என்கிற நம் தேசிகன் ஸ்ரீ ஸூக்திப்படி காருண்யத்திலேயே ஈடுபடவுமாம்.

மேலும் ஸ்ரீராமபத்ரன் தன்னடிச்சோதிக்கெழுந்தருளுங்கால் கருணையின்மிகுதியால் புல்பூண்டு எறும்பு முதலிய திருவயோத்யையில் வஸிக்கும் எல்லா ஜந்துக்களையும் கூட்டிப்போய் அவைகளை மோக்ஷஸாதனமான உபாயத்திலே மூட்டி எல்லாவற்றிற்கும் ஸ்ரீவைகுண்டத்தைக் கொடுத்த ப்ரகாரத்தை நம்மாழ்வார் அநுஸந்தித்து, ஆநந்தம் உள்ளடங்காமல் 'கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ புற்பா முதலாப்புல்லெறும்பாதி யொன்றின்றியே - நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே' என்று சகல சேதனர்களுக்கும் வெளியிட்டார்.

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ஸர்வேச்வரன் ப்ரகாசிப்பித்திருக்கும் கருணையின் பரீவாஹங்கள் அநவதிகமான ஸௌலப்யத்தால் பரிபோஷிதங்களாகையால் இதராவதாரங்களிற் காட்டில் மிகுந்த மேம்பாடுடையனவாயிருந்தன.

நந்தர்குலத்தில் இடைப்பிள்ளைமார்கள் வர்ஷந்தோறும் இந்த்ரனுக்கு இடும் பலியை தன் கோக்களுக்கு இடும்படி கண்ணபிரான் நியமித்தபடியால் அவர்களும் அப்படியே செய்ய, இந்த்ரனும் சினமடைந்து 'வழுவொன்றுமில்லாச்செய்கை வானவர்கோன் வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட மழை வந்து ஏழுநாள் பெய்து மாத்தடைப்ப' என்கிறபடி சிலாரூபமாக வர்ஷிக்கச்செய்து கோக்களையும் ஆயர்குலத்தையும் பீடிக்கவே அவைகள் அலறி கண்ணபிரானைச் சரணம்புக, அவனும் தன் சுண்டுவிரலால் கோவர்தன பர்வதத்தையே குடையாகத்தூக்கி அவைகளை ரக்ஷித்துத் தன் கருணையை பலபர்யவஸாயியாகச் செய்ததில் திருமங்கைமன்னன் மிகவும் ஈடுபட்டு, திருநெடுந்தாண்டகத்தில் தலைவனைப்பிரிந்த தலைவி தன் கிளிக்கு எம்பெருமானுடைய வைபவாநுஸந்தானம் செய்வித்ததில் 'கல்லெடுத்துக் கல்மாரி காத்தாயென்றும்' என்று முதலில் இந்த உபகாரத்தை அநுஸந்தானம் செய்து வைத்ததாக தாயார் தன்மையில் அருளிச்செய்தார்.

மேலும் குசேலர் என்னும் பரமபாகவதர் பெரியகுடும்பியாதலால் தங்களுடைய தாரித்ர்யத்தைப்பார்த்து சிந்தை கலங்கின தன் தர்மபத்னியின் ப்ரார்த்தனையால் அதி ஸ்வல்பங்களான ப்ருதுகங்களை (அவல்) உபஹாரமாகக்கொண்டு தன் தோழனை ஸ்ரீ கிருஷ்ணனை ஸேவிக்கச் சென்றவளவில் ஸ்ரீ கிருஷ்ணனும் அவரை மிக்க அன்புடன் உபசரித்து 'எனக்கு பக்ஷ்ய வஸ்து என்ன கொண்டுவந்திருக்கிறீர்' என்று வினவ இவரும் தான் எடுத்துவந்த அல்ப வஸ்துவை ஸமர்ப்பிக்க லஜ்ஜைப்பட, கண்ணபிரானும் இவரிடமிருக்கும் சிறிய முடிப்பைக்கண்டு பரபரப்புடன் முடிப்பைத்தானே அவிழ்த்து அவல்களை ஸ்வீகரித்து 'நந்வேததுபநீதம் மே பரமப்ரீணநம் ஸகே । தர்பயந்த்யங்க மாம் விச்வமேதே ப்ருதுகதண்டுலா:' (தோழனே? எனக்கு மிகவும் ப்ரீதிக்ரமான வஸ்து உன்னால் கொண்டுவரப்பட்டது. இந்த அவல்கள் ஜகத்தையே சரீரமாகக்கொண்ட என்னையும் திருப்தி செய்கின்றன) என்று விளம்பி அவருக்கு குபேரஸம்பத்துக்களையும் அனுக்ரஹித்த அவனுடைய தயையைக்கண்டு ஆச்சர்யப்பட்டு 'தைவம் ஸேவிதா ஸேவநிஸ்த்ருதோ ஹ யோ[illegible]ஸௌ த்யாய: ஸா[illegible] [illegible] ஸ்ய ஸ்வே [illegible] ப்ருதுகே த்ருதஸ்ய விப்ருதமதாம்' என்று (ஒரு பிடி அவலுக்கு) குபேர ஸம்பத்துக்களைக் கொடுத்த கண்ணபிரானுடைய ஸேவையையே நம் தேசிகன் விரும்பினர்.

இங்ஙனம் சேதனர்கள் உஜ்ஜீவிக்கும்படி ஒவ்வொரு ஆச்ரிதனுக்கும் பரமக்ருபையால் மஹோபகாரம் செய்தும் ஸம்த்ருப்தி யடையாத பரம புருஷன் ஒவ்வொரு சேதனனுக்கும் அந்தராத்மாவாயிருந்து அவனுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைத் தன் ஸங்கல்பத்தால் உண்டுபண்ணி சேதனனுடைய ஆனுகூல்யத்திலேயே அவஹிதசித்தனாயிருந்து அநுக்ரஹம் செய்ய காரணமான புருஷோத்தமனுடைய கருணையைக் கண்டு உருகின ஸ்ரீதேசிகன் 'ஔதந்வதே மஹதி ஸத்மநி பாஸமாநே ச்லாக்யே ச திவ்யஸதநே தமஸ: பரஸ்மிந் । அந்த: கலேபரமிதம் ஸுஷிரம் ஸுஸூக்ஷ்மம் ஜாதம் ஸுதீர்க[illegible] ரமணாஸ்பதம் தே' (ஹஸ்திகிரி நாதனே? கலங்காப்பெருநகரமாகிய ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல் இவைகளை திவ்யஸ்தானமக உடைய உனக்கு இந்த சரீரத்திற்குள்ளிருக்கும் மிக்க சிறிய துவாரம் எப்படி ப்ரீதி விஷயமான வாஸஸ்தானமாயிற்று?) என்று அருளிச்செய்தார். ஆகையால் பகவானுடைய கல்யாணகுணங்களில் நம் பூர்வாசார்யர்களால் மிகவும் கொண்டாடப்பட்ட காருண்யத்தையே நாம் அவலம்பித்து உஜ்ஜீவிப்போமாக.

நீதி ச்லோகங்கள்.

(ஸ்ரீ. உ. வெ. வே. க்ருஷ்ணமாசார்யர்.)

க்ருஷ்ண த்வம் பட கிம் படாமி நநு ரே சாஸ்த்ரம் கிமேதஜ்ஜாயதே
தத்வம் கஸ்ய விபோ: ஸ கஸ்த்ரிபுவநாதீசஸ்து தேநாபி கிம் ।
ஜ்ஞாதம் பக்திமதோ விரக்திமநஸ: கிம் ஸ்தேயிநோ வர்த்ததே
கிம் வேஷ்டம் நவநீத ஸித்யவதநோ ஹ்யாத்தாநநோ பாலக: ॥

'த்ருடி யுகாயதே த்வாமபச்யதாம்' என்று க்ஷண காலமேனும் பகவானைச் சேவிக்காவிட்டால் தன்னைத்தான் தரிக்கமாட்டாமல் துடிக்கும் பாகவதர்களுக்குத் தன் திருமேனி சேவையைத்தந்து காப்பாற்ற வேண்டிய நிமித்தம் 'பரித்ராணாய ஸாதூநாம்' என்ற தன் பிரதிஜ்ஞை வீணாகாதபடி வஸுதேவ குமாரராய் அவதரித்த ஸ்ரீ க்ருஷ்ணனை யசோதையானவள் புத்ரபாவனையுடன் அனுபவித்து வரும்போது ஒரு சமயத்தில் யசோதைக்கும் கண்ணனுக்கும் நேர்ந்த ஸம்வாதத்தில் இது ஒன்று.

யசோதை—க்ருஷ்ண ! நீ எப்போதும் விளையாடிக்கொண்டிருக்கிறாயே, பாடங்களைப் படிக்கவேண்டாமா, கொஞ்சநேரம் பாடங்களைப்படி.

க்ருஷ்ணன்—கிம் படாமி — எதைப்படிக்கச் சொல்லுகிறீர்கள்?

யசோதை—நநு ரே சாஸ்த்ரம் — என்னடா குழந்தாய்! புதியதாய்க் கேழ்க்கிறாயே, சாஸ்திரங்களைப் படிக்கவேண்டாமோ. சாஸ்திரங்களைப் படி.

க்ருஷ்ணன்—கிமேதஜ்ஜாயதே — அம்மா, சாஸ்திரங்களைப் படிப்பதால் என்ன பலன். தொண்டைவற்றி உலர்ந்துபோவதைவிட வேறு பலன் இல்லையே.

யசோதை—தத்வம் — என்னடா கண்மணி! அப்படிச்சொல்லுகிறாயே, சாஸ்திரங்களைப் படிக்காவிட்டால் உண்மை விளங்காது. அதனால் புத்தி கலங்கிவிடும்.

க்ருஷ்ணன்—கஸ்ய — அம்மா, எந்த வஸ்துவின் உண்மை விளங்கும்.

யசோதை—விபோ: — குழந்தாய் ஈச்வரனுடைய உண்மை வெளிப்படும்.

க்ருஷ்ணன்—(என்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாமல் என்னைத் தவிர வேறு ஒரு ஈச்வரன் இருப்பதாக எண்ணி யசோதை ஸ்ராகர தவாஸியால் சொல்லுகிறாள் என்று இவளுடைய மௌட்யத்தைக் கண்டு கொஞ்சம் சிறித்துக்கொண்டு) ஸ க: — அம்மா, அந்த ஈச்வரன் யார்?

யசோதை— த்ரிபுவநாதீஶ: — குழந்தாய், அவர்தான் மூன்று உலகங்களுக்கும் ஸ்வாமி.

க்ருஷ்ணன்— தேநாபி கிம் — நம்முடைய கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாதபடி மறைந்திருக்கும் ஈச்வரனைக் கஷ்டப்பட்டு தெரிந்துகொள்வதினால் என்ன பலன்?

யசோதை— ஜ்ஞாந பக்தி வைராக்ய ஸித்தி: — குழந்தாய், அப்படிச் சொல்லாதே, ஈச்வரனுடைய மகிமையைத் தெரிந்துகொண்டால் அவன் விஷயமான ஜ்ஞானமும் பக்தியும் ஈச்வரனைத் தவிர மற்ற விஷயங்களில் வைராக்யமும் உண்டாகும்.

க்ருஷ்ணன்— ஏநயா கிம் — அம்மா, ஜ்ஞானம் பக்தி வைராக்யம் என்று பெரிய பெயர்களைச் சொல்லுகிறீர்களே, அவைகளைச் சம்பாதிப்பதும், பிறகு காப்பாற்றுவதும் மிக்க கஷ்டமானது. அப்படிக் கஷ்டப்பட்டு அடையப்பட்ட அவைகளால் நமக்கு என்ன ப்ரயோஜனம்?

யசோதை— முக்தி: — குழந்தாய் பெரிய கேள்விகளையெல்லாம் கேட்கிறாய், சொல்லுகிறேன் கேள். மோக்ஷம் என்ற உத்தம புருஷார்த்தம் கிடைக்கும்.

க்ருஷ்ணன்— ஸா வாஸ்து தே — அம்மா ஏதோ பால் தயிர் வெண்ணை கிடைக்குமென்று பார்த்தேன். மோக்ஷமா இது யாருக்கு வேண்டும். உங்களுக்கே இருக்கட்டும்.

யசோதை— கிம் தவேஷ்டம் — அப்பா, உனக்கு என்ன இஷ்டம்?

க்ருஷ்ணன்— நவநீதம் — அம்மா எனக்கு வெண்ணெய்தான் வேண்டும் என்று சொல்லிக்கொண்டு தன் வாயைத்திறந்து வெண்ணெய் கொடு என்று கேட்டார். யசோதையானவள் பகவானுடைய வயிற்றில் ஸமஸ்த உலகங்களும் இருப்பதைக் கண்டு புத்ரபாவனையை விட்டு ஸாக்ஷாத் ஸர்வேச்வரன் நமக்குப் பிள்ளையாக அவதரித்திருக்க அவருடைய ஸ்வரூபம் தெரியாமல் ஏமாந்து போனேனே என்று திகைத்து ஈச்வரபாவனையுடன் கொஞ்சநேரம் பகவானை யனுபவித்தாள்.

இவ்விதமாக ஸகலவேதாந்த ரஹஸ்யமான விஷயங்களை ஸம்வாதவ்யாஜத்தால் வெளியிட்ட பகவான் நம்மைக் காப்பாற்றுவாராக.

மிகவும் போக்யன் என்றும், மூன்றும் பத்தில் அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவன் என்றும், நான்காம் பத்தில் போக்யங்களாகத் தோற்றுகிற ஐஶ்வர்யாதி புருஷார்த்தங்களைவிட மேற்பட்டவன் என்றும், ஐந்தாம் பத்தில் புருஷார்த்தோபாயானுஷ்டானத்திற்குக் காரணமென்றும், ஆறும்பத்தில் ப்ரபத்தி செய்வதற்கு ஸுலபனானவன் என்றும், ஏழாம்பத்தில் தன்னை ஆஶ்ரயித்தவர்களினுடைய அநிஷ்டங்களைப் போக்கடிக்கக் கூடியவனென்றும், எட்டாம் பத்தில் தன்னுடைய பக்தர்களின் இஷ்டப்ரகாரம் நடப்பதில் ஆசையுடையவன் என்றும், ஒன்பதாம் பத்தில் ஒருகாரணமுமில்லாமல் ஸஹஜ ஸுஹ்ருத்தென்றும், பத்தாம் பத்தில் அர்ச்சிராதிகதியில் ஸஹாயமா யிருப்பவன் என்றும் நிரூபித்தருளி இப்படிப்பட்டவனாகையினாலே தன்னை அடைவதற்குத்தானே உபாயம் என்று இப்ரபந்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

இக்ரந்தத்தில் ஸாரமாய் ப்ரதிபாதிக்கப்படும் விஷயம்.

சாஸ்திரங்களைக்கொண்டே அவச்யம் அறியவேண்டியதாய் நிச்சயிக்கப்பட்ட விஷயங்களான தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டதான ஜீவாத்ம ஸ்வரூபத்திலும், பரமாத்ம ஸ்வரூபத்திலும், அவனுடைய அநுக்ரஹத்திற்கு உபாயமானவைகளிலும், அவனுடைய க்ருபையினாலே மோக்ஷத்தை அடைவதிலும் அவனிடத்தில் அபசாரம் செய்வதினால் அநேகவிதமான துக்கங்களை அடைவதிலும், பாகவதோத்தமர்களின் ப்ரபாவத்திலும் அப்படிப்பட்ட பாகவதர்களை ஆச்ரயிப்பதினால் மனதின் கல்மஷம் நிவ்ருத்தி அடைவதிலும் ஸாராம்சத்தைத் தம்முடைய பரம க்ருபையோடு கூடினவராய் த்ரமிடோபநிஷத்தாகிற இத்திருவாய் மொழியில் அருளிச்செய்திருக்கிறார். இதில் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டதான ஜீவாத்ம ஸ்வரூபத்தில் ஸாரமானது பகவத் கைங்கர்யைக ப்ரயோஜனனா யிருக்கை என்பது (1) 'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே, எனக்கே கண்ணனையான் கொள்சிறப்பே' என்றும், பரமாத்ம ஸ்வரூபத்தில் ஸாரமானது ஸௌசீல்ய குணயுக்தனா யிருக்கை என்பது (2) 'உயர்வற உயர்நல முடையவன் எலன் எவன் என்றும்' (3) 'ஈசன் வானவர்க்கென்பன்' என்றும், உபாயமான வற்றில் ஸாராம்சமானது ப்ரபத்தியும், அதிலும் ஆசார்ய நிஷ்டையும் என்பது (4) 'அகலகில்லேன்' என்றும், (5) 'வேதம் வல்லார்களைக்கொண்டு' என்றும், பகவானுடைய க்ருபையினால் மோக்ஷத்தை

(1)9 4-2-. (2) 1-1-1. (3) 8-3-4. (4) 6-10-10.

அடைவதில் ஸாரமாவது அவனே ப்ராதனமாயிருந்து வழிநடத்துகை யென்பது (6) 'சூழ்விசும்பு' என்றும், அவனுடைய நிக்ரஹத்தினால் துக்கங்களை அனுபவிக்கிறான் என்பதில் ஸாரமானது அவனைவிட்டுப் பிரிந்திருக்கையே துக்கமென்றறிகை என்பது (7) 'அவனைவிட்ட கன்று யிராற்றலாகா' என்றும் பாகவதர்களின் ப்ரபாவத்தில் ஸாரமானது மோக்ஷாதி புருஷார்த்தங்களும் பாகவதர்களுடைய அனுக்ரஹத்திற்கு ஸத்ருசமாகாது என்பது (8) 'நெடுமாற்கடிமை' என்கிற திருவாய்மொழியிலும், பாகவதர்களை ஆஶ்ரயிப்பதில் மனதின் கல்மஷம் நிவ்ருத்தி அடைவதில் ஸாரமானது தேவதாந்தர ஸம்பந்த பர்யந்தமான அத்யந்த காலுஷ்ய நிவ்ருத்தி உண்டாகும் என்பது (9) 'தீர்ப்பாரையாமினி' என்னும் திருவாய்மொழியிலும் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன.

இப்ரபந்தத்தில் அர்த்தபஞ்சகம் ப்ரதிபாதிக்கப்படும் ப்ரகாரமும், ரஹஸ்யத்ரயங்கள் விவரிக்கப்பட்டிருப்பதும், மற்றும் விஶேஷார்த்தங்களும் உபதேசமுகமாக அறியத்தக்கவைகள்.

உபஸம்ஹாரம்.

இப்படி ஸர்வவிதத்தாலும் உத்க்ருஷ்டமா யிருந்தபடியினால் இப்ரபந்தத்தை ஸ்ரீமந்நாதமுனி ப்ரப்ருதிகள்போர விரும்பிப் போந்தார்கள். ஆகையினாலேயே இது ஆழ்வாரால் கண்டறியப்பட்ட த்ராவிடவேதமாயிற்று.

(5) 4-6-8. (6) 10-9-1. (7) 9-9-11. (8) 8-10-1. (9) 4-6-1.

[illegible]

ஆதலால் கல்பஸூத்திரம் செய்தவர்களாலும் மனு முதலியவர்களினாலும் தங்கள் ஸ்ம்ருதிகளில் சொல்லப்படவில்லை என்கிற ஆக்ஷேபம் நிராகரிக்கப்பட்டது. உலகத்திலும் ஸ்மிருதி கர்த்தாக்களான எல்லோராலும் எல்லாமும் ஸ்மிருதியில் சொல்லப்படுகிறதில்லையல்லவா. அப்படியாகில் மற்றொரு க்ரந்தங்களை அபேக்ஷிக்கவேண்டியதில்லையே என்கிற கேள்விக்கு இடமுண்டாகும். கல்பஸூத்திரக்காரர்களினாலும், மனு முதலியவர்களினாலும் எடுக்கப்படாத எவ்வளவு அர்த்தங்கள் இதிஹாஸம், புராணம், ஆயுர்வேதம் (வைத்ய ஶாஸ்திரம்), காந்தர்வ வேதம், அர்த்த ஶாஸ்திரம், சில்ப ஶாஸ்திரம் முதலியவைகளில் சொல்லப்படுகின்றன. மேலும் இது விஷயத்தில் ஶாண்டில்ய ஸ்மிருதியில் 'பசு பிள்ளை முதலியவைகளையும் வீடு முதலிய ஸாமக்ரிகளையும் சங்கு சக்ரங்களால் அங்கனம் செய்விக்கவேண்டும், விஷ்ணுவினுடைய நாமங்களையும் வைக்கவேண்டும், குழந்தைகளுக்கு ப்ரஸவித்த அன்றையிலேயே ஸுவர்ணத்தினால் பகவானுடைய பஞ்சாயுதங்களைச்செய்து கழுத்தில் கட்டவேண்டும், உட்காரும் ஆஸனம், படுக்கை, பூமி, இவைகளில் சங்கசக்ராங்கனம் செய்யக்கூடாது, கழனிகளின் நடுவில் சக்ரம் முதலியவைகளினால் அங்கனம் செய்யப்பட்ட கல்லை ஸ்தாபனம் செய்யவேண்டும், முத்துக்கள் ரத்னங்கள் தங்கம் முதலியவைகளினால் சக்ரம் முதலிய அடையாளங்களைச் செய்து புருஷர்களும் அவரவர்களுக்குத் தக்கபடி தரித்துக்கொள்ளவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிஹாஸங்களிலும் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுதர்மத்தில், எண்பத்திரண்டாவது அத்யாயத்தில், யமனுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் நடந்த

[illegible] ந்நைவ பவிஷ்யதி நர: க்வசித் ||” இத்யாதி | யமேந— “வஸதி மநஸி யஸ்ய ஸோ(அ)வ்யயாத்மா புருஷவரஸ்ய ந தஸ்ய த்ருஷ்டிபாதே | தவ கதிரதவா மமாஸ்தி சக்ர ப்ரதிஹத வீர்ய பலஸ்ய ஸோ(அ)ந்யலோக்ய: ||” இதி ஸ்ரீவிஷ்ணுபுராணகத யம கிங்கர ஸம்வாத வசநைரபி மதிவாசாநாம் ந்யாயேந ப்ராப்தயே— “பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்” இதி ப்ரபந்ந ப்ரகரணவிஹிதத்வாச் ச வாசிகமாநஸிகஶௌசவச் சாரீர ஶௌசஸ்ய வக்தவ்யத்வாச், ஸ்வவாக்யவிஹிதத்வாச், அந்யபதாத்யாஹாரா நபேக்ஷத்வாச் ச | அயமேவார்த்த: ஸாத்வதேஷ்வபி யமக்ருஷ்ண

ஸம்பாஷணையில் ‘இந்த லோகத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற உங்களுடைய உத்திரவைமீறி நடப்பவன் பகவானை ஆஸ்ரயித்தவன் என்று தெரிவிக்கக்கூடிய அங்கனமில்லாத மனுஷ்யன் ஓரிடத்திலும் இருக்கப்போகிறதில்லை’ என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. இத்தால் விஷ்ணு புராணத்தில் யமனுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் நடந்த ஸம்பாஷணமாக ‘எந்தப் புருஷஸ்ரேஷ்டனுடைய மனதில் அழிவில்லாத ஸ்வரூபத்தை உடைய அந்தப் பகவான் வஸிக்கிருரோ அவனுடைய கண்ணுக்குத் தெரியும் இடத்தில் உங்களுக்கு ஸஞ்சரிக்கக்கூடிய யோக்யதை இல்லை, அவனுடைய சக்ரத்தினுல் தடுக்கப்பட்ட வீர்யத்தையும் பலத்தையும் உடைய எனக்கும் இல்லை, அவன் வேறு லோகத்திற்குப் போகக்கூடியவன்’ என்று சொல்லியிருப்பதும் மற்றும் சில வசனங்களை அனுஸரித்திருக்கவேண்டும் என்கிற ந்யாயத்தினுல் அங்கனமாகிய சக்ரத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்று வ்யாக்யானம் செய்யப்பட்டது—‘பகவானிடத்தில் ப்ரபத்தி செய்தவர்களை விட்டுவிடு’ என்று ப்ரபன்னர்களைப் பற்றிச் சொல்லியிருக்கும் ஸந்தர்ப்பத்திற்கு உசிதமாயிருப்பதினுலும், வாக்குக்கு உண்டான ஸுத்தியும் மனதிற்கு உண்டான சுத்தியும் அவச்யம் சொல்லவேண்டியதைப்போல சரீரத்திற்கு உண்டாகவேண்டிய சுத்தியும் அவஸ்யம் சொல்லவேண்டியதாகையினுலும், (அதாவது ‘ஸுஉுநயந வாஸுதேவ’ என்ருரம்பிக்கும் ஸ்லோகத்தில் வாக்குக்கு உண்டாகும் சுத்தியும், ‘உயுவஸுநப்ரவஹாநு’ என்பதினுல் மனதிற்கு உண்டான ஸுத்தியும், ‘சக்ரப்ரதிஹத’ என்பதினுல் சக்ராங்கனத்தினுல் ஸரீரத்திற்கு உண்டான ஸுத்தியும் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம்), தன் வாக்யத்திற்கு உசிதமாயிருப்பதினுலும், வேருெரு பதத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டியதில்லாமையினுலும் (அதாவது ‘சக்ர’ என்பதோடு ‘பகவானுல் தரிக்கப்பட்ட’ என்கிற பதங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும், இந்தப்பக்ஷத்தில் அது இல்லை என்றபடி). இதே அர்த்தம் மாத்ஸ்ய புராணத்திலும் வேருெரு இடத்திலும் யமனுக்கும் க்ருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த ஸம்பாஷணையில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்

ஜுந ஸம்வாதேபி த்ருஷ்ட:— “சக்ராங்கித தேஹோ யோ மத்பக்தோ பூமி மாநுஷ: | நைவாப்நோதி வஶம் ம்ருத்யோ: மமாஜ்ஞா லங்கந: || நாந்யம் தேவம் நமஸ்யேத நாந்யம் தேவம் நிரீக்ஷயேத் | நாந்ய ப்ராஸாத மாரோஹேந் நாந்யதாயதநம் விஶேத் | சக்ராங்கித: ஸதா திஷ்டேத் மத்பக்த: பாண்டுநந்தந ||”-இதி | ஏவம் சக்ராதிதாரணாத் ம்ருத்யுவஶகதாபாவ:, ஸ்ரீவிஷ்ணுதத்வேபி நரகப்ரஸ்தாவே ப்ரோக்த:—‘சக்ராதி தாரணம் பும்ஸாம் பரஸம்பந்தவேதநம் | பதிவ்ரதா நிமித்தம் ஹி வலயாதி விபூஷணம் | வைஷ்ணவேப்யோ ஹி பிப்யதி தேவா நரகரக்ஷகா: | அவமாநக்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத், | நாஸ்மிந்நே தாவதா தேஷு நரகேஷு த்ருஶ்யதே | ந்ருஶம்ஸோ மஹாவீர்ய ப்ரபாவாத் பரமேஷ்டிந: ||” - இதி | ஏவம் பாரதேதிஹாஸ ஸாரதயா ஸர்வஶிஷ்ட பரிக்ருஹீதேதிஹாஸ ஸமுச்சயே த்வாத்ரிம்ஶே(அ)த்யாயே ஸ்ரீபுண்டரீகாக்யாநே— “தேவி சக்ராங்கிதா

கிறது. ‘என்னுடைய சக்ரத்தினுல் அங்கனம் செய்யப்பட்ட சரீரத்தை உடையவனும், என்னிடத்தில் பக்தி உடையவனும், இந்தப் பூலோகத்தில் துர்லபனும் இருக்கிற மனிதன் என்னுடைய ஆஜ்ஞையை மீறி நடந்தவனுய் இருந்தபோதிலும் யமனுக்கு வசனுயிருக்கையை அடைவதில்லை, ஓ! அர்ஜுன! வேருெரு தேவதையை நமஸ்காரம் செய்யக்கூடாது, வேருெரு தேவதையையும் பார்க்கக்கூடாது, வேருெருவருடைய வீட்டிற்குச் செல்லக்கூடாது, வேருெரு தேவதையின் கோவிலிலும் நுழையக்கூடாது, என்னிடத்தில் பக்தியுடையவன் எப்பொழுதும் சக்ராங்கனம் உடையவனுகவே இருக்கவேண்டும்’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச் சக்ரம் முதலியவைகளைத் தரிப்பதினுல் யமனுக்கு வசப்பட்டிருக்கை இல்லாமல் போகிறது என்று ஸ்ரீ விஷ்ணு தத்வத்தில், நரகத்தை ப்ரஸ்தாபம் செய்யும் இடத்தில், ‘மனுஷ்யர்கள் சக்ரம் முதலியவைகளைத் தரிப்பது பகவானுடைய ஸம்பந்தத்தை (அதாவது அவனைச் சேர்ந்தவன்) என்பதைத் தெரிவிக்கிறது. வளை முதலிய ஆபரணங்கள் பதிவ்ரதை என்பதைத் தெரிவிக்கிறதல்லவா, அதைப்போல, வைஷ்ணவர்களிடத்தில் இருந்து நரகத்தைக் காத்துக்கொண்டிருக்கும் தேவதைகள் பயப்படுகிருர்கள். அவர்களை அவமானம் செய்வது எல்லா உலகத்தையும் நாசம் செய்துவிடும். இவ்வளவு நாளாக அந்த நரகங்களில், மஹா பராக்ரமசாலியே! அந்தப் பரமாத்மாவின் மஹிமையினல் அப்படிப்பட்டவர் ஒருவரும் காணப்படவில்லை’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே பாரதம் என்கிற இதிஹாஸத்திற்கு ஸாரமாக எல்லா சிஷ்டர்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற இதிஹாஸ ஸமுச்சயத்தில், முப்பத்திரண்டாவது அத்யாயத்தில், ஸ்ரீ புண்டரீகனுடைய

[illegible]

சரித்ரத்தைச் சொல்லும்பொழுது 'அந்த இடத்தில் சக்ராங்கனம் செய்யப் பட்டவர்களாய் மிகவும் புண்யமான பார்வைகளை உடைய சில ப்ராணிகள் புண்ய தீர்த்தங்களை ஸ்தோத்திரம் செய்துகொண்டு தங்கள் இஷ்டப்படி ஸஞ்சரிக்கிறார்கள்' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. இது அவ்விடத்தில் நிராகரிக்கவேண்டிய பக்ஷத்தில் சேர்ந்ததல்ல, அங்கியாகிய பகவானைப்பற்றிய உபாஸனத்தைச் சொல்லி உடனே சொல்லப்பட்டிருப்ப தினால். முன்பின் ஸந்தர்ப்பங்களில் சொல்லப்படுகிற அனேக ஶாஸ்திரங்க ளிலுள்ள அனேகவித பக்ஷங்களின் விகல்பங்களுக்குள் சேர்ந்ததுமல்லவாத லாலும். ஶாளக்ராம க்ஷேத்திரத்தைப்பற்றி இந்த வாக்யம் ஸ்தோத்திரம் பண்ணி இருப்பதினாலும், அப்படியே 'நாரதராகிய நான் உம்மைப் பார்க்க வேண்டுமென்கிற குதூஹலத்தினால் வந்தேன், ஓ! ப்ராம்மணரே! என் னைப்போல் இருப்பவர்களுக்கு எப்பொழுதும் பகவானிடத்தில் பக்திசெய்து கொண்டிருப்பவர்கள் ப்ரபுக்கள், ஓ! ப்ராம்மணஶ்ரேஷ்டரே! பகவானிடத் தில் பக்திசெய்துகொண்டிருப்பவன் சண்டாளனாயிருந்தபோதிலும் அவன் யாத்ருச்சிகமாக நினைக்கப்பட்டிருந்தாலும், ஸம்பாஷிக்கப்பட்டிருந்தாலும், பூஜிக்கப்பட்டிருந்தாலும் பரிசுத்தம் செய்கிறான்' என்று பகவானிடத்தில் பக்தி செய்துகொண்டிருப்பவர்களை ஸ்தோத்திரம் செய்வதில் தாத்பர்யம் என்று ஏற்படுகிறபடியினாலும். மற்ற எல்லாம் இருக்கட்டும். பகவானாகிய வ்யாஸராலேயே ஐந்தாவது வேதமாகிய மஹாபாரதத்தில், பீஷ்மபர்வத் தில், நாலாவது தினம் நடந்த தேவரஹஸ்யத்தில் 'தங்கள் தங்கள் தர்மங்களில் ஆசை உடையவர்களாய் இருக்கிற சக்ராங்கனம் செய் யப்பட்டிருக்கிற ப்ராம்மணர்களாலும் க்ஷத்திரியர்களினாலும் வைஶ்யர்

[illegible]

களினாலும் சூத்திரர்களினாலும் எந்த சாஸ்திரம் ஸங்கர்ஷணரால் சொல் லப்பட்டதோ, அந்தப் பாஞ்சாத்திர ஶாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விதியை அடைந்துஆராதானம் செய்யத்தக்கவன், ஆச்ரயிக்கத்தக்கவன்' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. லாஞ்சனம், லக்ஷ்ம, லக்ஷணம், என்கிற பதங்கள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிற பதங்கள். இது ஸமீபத்தில் இருக்கிறபடியினால் சூத்திரர்கள் மாத்திரத்தைப் பற்றி யது என்று சொல்லுவது யுக்தமல்ல—ஒன்றாகச்சேர்த்துச் சொல்லப்பட்ட நான்கு பதங்களுக்கும் இதில் அந்வயம் உண்டு என்று தோன்றுகிறபடியி னால். 'க்ருதலக்ஷணை:' என்பதை செய்யப்பட்ட ப்ராம்மணர்களுடைய ஆசாரத்தை உடையவர்களினால் என்று எவர்கள் வ்யாக்யானம் செய்தார்களோ அவர்களுக்கு ஆக்ரஹமான பிசாசினால் பதங்களின் அர்த்தத்தைப்பற்றிய ஜ்ஞானமும் அபஹரிக்கப்பட்டிருக்கிறது. 'லக்ஷண' என்னும் பதம் ஆசார (நடவடிக்கை) என்பதைச் சொல்லுகிறதென்று ப்ரஸித்தியில்லா மையினாலும் ப்ரஸித்தமான அர்த்தத்திற்கு ஒருவித விரோதம் இல்லாமை யினால் ஔபசாரிகமாய் அப்ரஸித்தமான அர்த்தத்தை அங்கீகரிப்பது யொரு த்தமானதையினாலும், ஆசாரத்தைத் தெரிவிக்கிறது என்பதற்குத் தகுந்த அவயவ வ்யுத்பத்தியாவது, ஔபசாரிகமாக அர்த்தம் சொல்லுவதற்குக் கார ணமாவது, நிர்வசனமாவது, ஸமமாக இருக்கை முதலிய ஸம்பந்தம் முதலி யவைகளாவது ப்ரகாசமாகக் காணப்படாமையினாலும். எவ்விதத்திலாவது வேறு அர்த்தம் சொல்லவேண்டும் என்னில் அதிப்ரஸங்கம் வரும். எவர் கள் 'யஜ்ஞோபவீதம் முதலிய அடையாளங்களினால்' என்று வ்யாக்யா னம் செய்தார்களோ அவர்களும் அந்த ஆக்ரஹமாகிற [illegible]

𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑌚𑌿𑌹𑍍𑌨𑌂 𑌯𑍇𑌨𑌾𑌪𑌿 𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌤𑌦𑍍𑌦𑍍𑌯𑍋𑌤𑌕𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 |
𑌨 𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌕𑍃𑌤𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑍇𑌤𑌿 𑌵𑌾-
𑌚𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌦𑌿𑌧𑌾𑌰𑌣 𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌾𑌦𑌿-
𑌷𑍂𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌹𑍋 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑍇𑌤𑌦𑌿𑌤𑌿𑌹𑌾𑌸𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 |
𑌯𑌦𑍍 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑌦𑌭𑌿𑌧𑌾𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌤𑌿𑌰𑍋-
𑌧𑌤𑍍𑌤𑍇 | 𑌆𑌦𑌿𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍇𑌵𑌾𑌭𑌾𑌵 𑌇𑌤𑌿 𑌇𑌤𑌿𑌹𑌾-
𑌸𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌿𑌤𑌃 | 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑍀𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂
𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌶𑍂𑌦𑍍𑌰𑍀 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯-
𑌤𑌾𑌂 𑌤𑌦𑌾𑌤𑌨𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌂 𑌤𑌦𑍍𑌧𑌾𑌰𑌣𑍇𑌨 𑌚𑌰𑌿-
𑌤𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 | 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾 𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌵𑌚𑌨𑌬𑌲𑌾𑌚𑍍𑌛𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌤-
𑌦𑍍𑌧𑌾𑌰𑌣𑌂, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌨𑌾𑌸𑍍𑌯 𑌶𑍍𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾 𑌶𑌕𑍍𑌯𑌾 | 𑌤𑍇𑌷𑌾-
𑌂 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑍁𑌗𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 | 𑌤𑌤𑌶𑍍𑌚

‘𑌶𑍂𑌦𑍍𑌰𑍇𑌷𑍁’ என்கிற பதத்தையும் அது அத்தோடு அன்வயிக்கிறது என்பதையும் மறக்கும்படி செய்விக்கப்பட்டார்கள். சூத்திரனுக்கு வேறு விதமான அடையாளம் ஒன்றும் இல்லை, அப்படி இருந்தால் ‘சூஜி’ என்கிற பதத்தினால் அதைச்சொல்லலாம். சூத்திரர்களுக்கும் க்ருதயுகத்தில் யஜ்ஞோபவீதங்களைத் தரிக்கவேண்டும் என்பது இதிஹாஸம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருப்பதினால் அது இவ்விடத்தில் ‘க்ருதலக்ஷணை:’ என்று சொல்லப்படுகிறது என்னில், இதிஹாஸங்களை அறிந்தவர்களுக்குள் மிகவும் சிறந்தவராயிருக்கும் தன்மையைப் பற்றி மிகவும் ஆச்சர்யம்! க்ரந்தங்களுடைய தாத்பர்யார்த்தத்தைப்போல பதத்தினால் நேரே சொல்லப்படுகிற அர்த்தத்தையும் மறைத்துச்சொல்லுகிறீரே. முதலாவதாகிய க்ருதயுகத்தில் சூத்திரர்கள் இல்லையென்று மஹாபாரதம் முதலிய க்ரந்தங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்தக்காலத்தில் எல்லோரும் யஜ்ஞோபவீதத்தைத் தரித்துக்கொண்டிருந்தார்கள் என்று சொல்லுவதும், அதற்குப்பிறகு அவரவர்களின் தொழில்களினால் சூத்திரர்களாகப்போகிற அந்தக் காலத்தில் இருந்த ப்ராம்மணர்கள் அதைத்தரித்துக்கொண்டிருந்தார்கள் என்பதினால் அர்த்தத்தோடு கூடியதாகிறது. அப்பொழுது வசனம் இருக்கிறபடியினால் சூத்திரர்களும் யஜ்ஞோபவீதத்தைத் தரித்துக்கொண்டிருந்தாலும் இருக்கட்டும். அப்படி இருந்தபோதிலும் இந்தஸ்லோகத்தில் அவர்களைச் சொல்லுகிறதென்று ஸந்தேஹிக்கமுடியாது— அவர்களுக்கு த்ரேதாயுகம் முதற்கொண்டு யஜ்ஞோபவீததாரணம் என்கிற ப்ரஸ்தாபமே இல்லாமையினால். இவ்விடத்திலோவெனில் அடுத்த ஸ்லோகத்தில் கால

𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌨𑌨𑍁 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨𑌾𑌭𑌿𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 "𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂
𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌗𑍀𑌤𑌃 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑍇𑌨 𑌯𑌃 | 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑌸𑍍𑌯 𑌯𑍁𑌗-
𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇 𑌆𑌦𑍌 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌸𑍍𑌯 𑌚 ||" 𑌇𑌤𑌿 | 𑌇𑌦𑌂 𑌚 𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷-
𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌷𑍇𑌧𑌪𑌰𑌮𑍍, 𑌸𑌾𑌰𑍍𑌵𑌕𑌾𑌲𑌿𑌕𑌤𑍍𑌵𑍇𑌨
𑌵𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌶𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌅𑌤 𑌏𑌵 𑌏𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇-
𑌷𑌪𑌰𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌦𑍋𑌷𑌃 | 𑌕𑌿𑌂 𑌚 𑌭𑌗𑌵𑌦𑌾𑌰𑌾𑌧𑌨𑌵𑌿𑌧𑌾-
𑌯𑌕𑍇 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌤𑌦𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌂 𑌵𑌿𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 |
𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌶𑌙𑍍𑌕𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌯𑌜𑍍𑌞𑍋-
𑌪𑌵𑍀𑌤𑌾𑌦𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌮𑌪𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍, 𑌤𑌥𑌾𑌪𑌿 "𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿-
𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁", '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌾
𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌗𑍃𑌹𑍀 𑌵𑌨𑍀 || 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌡𑍍𑌵𑌾𑌪𑌿 𑌪𑌤𑌿𑌤𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍-
𑌤𑌨𑍍𑌨 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ||" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑌤𑌸𑍍𑌥𑌿𑌰𑍀𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌦-
𑌸𑍍𑌯𑌾𑌵𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌰 𑌨 𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 | 𑌤𑌦𑍇𑌵𑌮𑌾-
𑌚𑌾𑌰𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌦𑍇𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑌾𑌰𑍍𑌚𑌨𑌸𑌾𑌧𑌾𑌰𑌣-

விசேஷம் ‘த்வாபரயுகத்தின் கடைசியிலும் கலியுகத்தின் ஆரம்பத்திலும் ஸங்கர்ஷணனால் சொல்லப்பட்ட பாஞ்சராத்ரஶாஸ்திரம் எதுவோ அதில்சொல்லிய விதியை அனுஸரித்து’ என்று காலம் குறிக்கப்பட்டிருப்பதினால். இந்தக் கால விசேஷத்தைக் குறிப்பிட்டிருக்கிறது மற்றக் காலங்களில் அதைச் செய்யக்கூடாது என்பதைத் தெரிவிக்கிறது என்பதும் உசிதமல்ல— அநேகம் இதர வசனங்களினால் இது எல்லாக்காலத்திலும் செய்யக்கூடியது என்று விதிக்கப்பட்டிருப்பதினால். ஆகையினால் அந்த சாஸ்திரத்தைப்பாடின காலத்தைக்குறிக்கிறது என்று சொன்னாலும் தோஷமில்லை. மேலும் பகவானுடைய ஆராதனத்தை விதிக்கிற இந்த வசனத்தில் அதற்கு அஸாதாரணமான ஒரு தர்மத்தை அதற்கங்கமாக விதிப்பது உசிதமாகும். வர்ணாச்ரம தர்மங்களை விட்டுவிடவேண்டுமென்கிற ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்வதற்காக யஜ்ஞோபவீதம் முதலியவைகளை விதித்திருப்பதும் யுக்தம் தான். அப்படி இருந்தபோதிலும் ‘ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் எப்பொழுதும் அபரிசுத்தன், ஒரு கார்யத்திற்கும் யோக்யதை இல்லாதவன்,’ ‘யஜ்ஞோபவீதத்தை விட்டால் ப்ரும்மசாரீ க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸீ இவர்கள் பதிதர்களாவார்கள், ஆதலால் அதை விடக்கூடாது’ என்றிவை முதலிய அநேகம் ஸ்ம்ருதிகளில் யஜ்ஞோபவீதத்தைத் தரிக்க வேண்டுமென்பது நன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினால் இங்கு அதை விதிக்கவேண்டுமென்கிற அபேக்ஷை இல்லை. ஆக இப்படி ஆசாரம் யஜ்ஞோபவீதம் முதலியவைகள் எல்லாத் தேவதைகளினுடைய ஆராதனங்களுக்கும் பொதுவாதலால் அதைப்பற்றி விசேஷித்து விதிக்கவேண்டியதில்லை என்பது யுக்த

க்ஷாஸ நாத்ர விஶேஷ இத்யபேக்ஷிதம் யத்து தந்மாஸோக்தம்। கிஞ்ச 'ஸாத்வதம் விதிமாஸ்தாய கீதஃ ஸங்கர்ஷணேந யஃ" இதி பகவச்சாஸ்த்ரப்ரவர்தகாசார்யேண ஸாஸ்த்ராயந விதாநாத் சக்ரத்ருக்ஷண பஞ்சராத்ரஸ்யாபி தத³நுஸாரேண வ்யாக்யா யுக்தா। தத்ர ஹி ப்ராஹ்மணாதீநாம் பகவதாராதநப்ரவ்ருத்தாநாம் சக்ராதிதாரணஸ்ய ஆவஶ்யகத்வம் சக்ரத்ருக்ஷணஶப்தஸ்ய ச தத்விஷயத்வம் ஸ்பஷ்டம்। யதா விஷ்ணுதந்த்ரே, ப்ரதிஷ்டாத்யாயே - 'ப்ரதிஷ்டாதிவஸம் ஜ்ஞாத்வா ருத்விக்பிர் த்விஜஸத்தமைஃ। ஏகாந்திபிர்ருஷிபிஶ்சைவ சக்ரத்ருக்ஷணைஃ। யஜமாநஃ ப்ரகாமீத்த வேத்யாதி ஸ்தாபநம் வசரா॥" - இதி। ததா பாரமேஶ்வரே ப்ரதிஷ்டாத்யாயே - "யேஷு ப்ரதேஶேஷு சிஹ்நாநி நாபிவ்யக்தாநி ஸந்தி ச। தாந்யபி ஸ்தாநாநி விஸ்தாநி லலாடே சாம்ஸபட்டயோஃ॥ ப்ருஷ்டே வா ப்ருஷ்டவம்ஶே வா பாணிபாதே தலேஷு வா। மூர்த்நி வா யதி தத்ஸ்யாச் தத்ர தத்ர நிரீக்ஷயேச்ச। யஸ்மாத்ஸுலக்ஷணா வ்யக்தி விஷ்ணோர்ந ஸதா பவேத்। ஏவம் ததீயவிப்ராஶ்ச க்ஷத்ரியா வைஶ்யஜாதயஃ। ஶூத்ராஶ்சாந்யே

மென்று தெரிந்துகொள். மேலும் 'எது ஸங்கர்ஷணனால் சொல்லப்பட்டதோ அப்படிப்பட்ட பஞ்சராத்திர சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விதியை அடைந்து' என்று பாஞ்ராத்திர சாஸ்திரத்தை முன்னிட்டு ஆராதனம் விதிக்கப்பட்டிருப்பதினால் 'சக்ரத்ருக்ஷணைஃ' என்கிற பதத்திற்கும் அதை அனுஸரித்து அர்த்தம் சொல்லுவது உசிதமாகும். அந்த சாஸ்திரத்தில் பகவானை ஆராதிப்பதற்காக ஆரம்பித்திருக்கிற ப்ராம்மணன் முதலிய எல்லோரும் சக்ராதிகளை அவஶ்யம் தரிக்கவேண்டும் என்பதும் 'சக்ரத்ருக்ஷண' என்கிற பதம் அதைச் சொல்லுகிறது என்பதும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே விஷ்ணுமந்திரத்தில், ப்ரதிஷ்டையைப்பற்றிச் சொல்லும் அத்யாயத்தில், 'ப்ரதிஷ்டை செய்யவேண்டிய தினத்தைத் தெரிந்துகொண்டு யஜமானன் சக்ரம் முதலிய அடையாளங்களை உடையவர்களான ரித்விக்குக்கள், ப்ராம்மண ஶ்ரேஷ்டர்கள், பரமைகாந்திகளான ரிஷிகள் இவர்களைக்கொண்டு வேதி முதலியவைகளின் ஸ்தாபனத்தை முதலில் செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே பாரமேஶ்வரஸம்ஹிதையில் ப்ரதிஷ்டையைப்பற்றிச் சொல்லும் அத்யாயத்தில் 'எந்த மூர்த்திகளில் ப்ரகாசமாகத் தோன்றுகிற இடங்களில் அங்கனங்கள் ப்ரகாசமாக இல்லையோ அவைகள் தங்கள் தங்கள் சின்னங்களை நெற்றியிலாவது தோள் பட்டைகளிலாவது முதுகிலாவது பின்கழுத்திலாவது உள்ளங்கை உள்ளங்கால்களிலாவது தலையிலாவது தரித்துக்கொண்டிருக்கின்றனவாகையினால் அந்தந்த இடங்களில் பார்க்கவேண்டும். ஆகையால் அந்தந்த இடங்களில் நன்றாய் பார்க்கவேண்டும், எந்தக்காரணத்தினால் பகவானுடைய ரூபங்கள் அஸாதாரணமான அடையாளங்களில்லாமல் ஒருபொழுதும் இருக்காதோ, இப்படியே அந்த பகவானுடைய தாஸர்களான ப்ராம்மணர்கள் க்ஷத்ரியர்கள் வைச்யர்கள் சூத்ரர்கள் இப்படியே மற்றவர்களும் அந்த பகவானுடைய சின்னங்களில்லாதவர்களாக எப்போதும் இருக்கக் கூடாது.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் - 14.

1923-1924

(ருதிரோத்காரிஹு - ரக்தாக்ஷிஹு.)

பத்ராதிபர்:—நாடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர் B. A. B. L.

கார்யதர்சி:—R. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் M. A.

சென்னை:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின்

கார்யதர்சியால் ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை:

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1924.

Copyright Reserved.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

அட்டவணை.

அடிமைத்திறம்:— திருமகள் நிலயம் ஸ்ரீ. உ. வே. ஆ. வ. பத்மநாபாசார்யர் 281

அபியுக்தர்களுக்கோர் விஜ்ஞாபனம்:—சொரையூர் ஸ்ரீ. உ. வே. பெ. வ. ஸ்ரீநிவாஸாசார்யர் 309

அர்த்தபஞ்சகவிமர்சநம்:— ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர் 320

ஆபோசன நிர்ணயம்:— நடாதூர் ஸ்ரீ. உ. வே. தி. நரஸிம்மாசார்யர் 218

ஆபோசனமும், ப்ராணாஹுதியும்:—ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 7,50

இம்மையும் மறுமையும்:— ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலதாதாசார்யர் 102,124

இயற்பா:— ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபால க்ருஷ்ணமாசார்யர் 311

உபயவேதாந்தம்:— ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு, சிங்கப்பெருமாள் ஸ்வாமி 135,151

ஒரு ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுகரின் நிர்யாணம்:— பத்ராதிபர் 152

ஓர் மஹோபகாரம்:— கார்யதர்சி

ஓர் விஜ்ஞாபனம்:— கார்யதர்சி 125

கடிதங்கள்:— 230,250,296,324

கடிதஸங்க்ரஹம்:— ஸ்ரீ. உ. வே. திருமாலி, ஸ்ரீநிவாஸாசார்யர் 147

குருகுலவாஸம்:— புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் 17

குருபரம்பரைகளின் பராமர்சம்:— ஸ்ரீ. உ. வே. அ. ரங்கஸாமி ஸரஸ்வதி 13

குருபரம்பரைகளின் விமர்சம்:— பண்டிதபூஷணம், ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 63

குருபரம்பரைகளின் விமர்ச சோதனம்:— வளாகம், ஸ்ரீ. உ. வே. சே. ர. நரஸிம்மாசார்யர் 181

கோபத்தைப் போக்கும்வழி:— ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர் 198

ச்ராத்தம்:— காடாந்தேத்தி, ஸ்ரீ. உ. வே. கோபாலாசார்யர் 238,255,301,333

ச்ருதிப்ராமாண்யம்:— ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி 214,274,305,325

ஜீவன்களும் மோக்ஷமும்:— ஸ்ரீ. உ. வே. வே. க்ருஷ்ணமாசார்யர் 87,222

தாதாசார்யர்:— ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 4

திவான்பஹதூர் தி. த. ரங்காசார்யரின் நிர்யாணம்:— பத்ராதிபர்

துளஸீ:— தெற்குத்தெரு ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் 85,118

நம்மாழ்வார் வைபவமும் திருவாய் மொழியின் பெருமையும்:— பண்டிதபூஷணம், ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர்

நீதிச்லோகங்கள்:— 25,61,100,132,221,345

நீறு:— சருக்கை, ஸ்ரீ. உ. வே. S. K. பார்த்தஸாரதி அய்யங்கார் 45

பஞ்சமகாயஜ்ஞங்கள்:— ஸ்ரீ. உ. வே. வி. க்ருஷ்ணமாசார்யர் 80

பண்டராபுரம்:— ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 294

பத்ராதிபரின் குறிப்புகள்:—

- இறைவன் அருளும், ஜீவனின் முயற்சியும் 273
- சாற்றுப்பாக்கள் 45
- ஜாதியும் ஒழுக்கமும் 250
- ஜீவதசைக்குப் பிறகு நமது ஸ்திதி 241
- தக்ஷஸ்ம்ருதியின் சிலதர்மங்கள் 285
- தீபிகையின் பதினைன்காவது ஆண்டு 2
- தீபிகையின் வசன நடை 226
- நமது அத்யக்ஷருக்கு ஸபையின் ஸத்காரம்:— 317
- நமது புது அத்யக்ஷர் 265
- நமது ஸபாத்யக்ஷரின் பரமபதகதி 225
- நமது ஸபையின் பதின்மூன்றுவது வார்ஷிகமஹாஸங்கத்தின் வ்ருத்தாந்தங்கள் 105
- நல்லொழுக்கம் 285
- ப்ரணயகலஹோத்ஸவம் 41
- மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்:— 141
- மோக்ஷ உத்ஸவம் 73
- ஸ்ரீவைஷ்ணவமதத்தின் சில ஆசாரங்கள் 137
- ஸம்மதியோக்ய வயதை நிர்ணயிக்கும் மசோதா 267
- ஹிந்துதேசத்தின் நவீன மதங்கள் 169
- ஹிந்துமதஸ்தாபன மசோதா 201
- வேதாந்த மதமும் இதர ஸேச்வரநிரீச்வர மதங்கள் 271

பத்ரிகாவிமர்சம்:— பத்ராதிபர் 200

பதின்மூன்றுவது வார்ஷிகமஹாஸங்கத்தின் தினசரி க்ரமங்கள் 97

புஸ்தகவிமர்சம்:— பத்ராதிபர் 149

பூததயை:— புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உ. வே, ஸ்ரீநிவாஸாசார்யர் 21,53

ப்ராணாக்நிஹோத்ர நிர்ணயம்:— நடாதூர், ஸ்ரீ. உ. வே. தி. நரஸிம்மாசார்யர் 142

புரஞ்ஜனோபாக்யானம்:— பண்டிதபூஷணம், ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 1-10

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்:— வாஜபேயம், ஸ்ரீ. உ. வே. வீரராகவதாதாசார்யர் 161-195

மதப்ரஷ்டவிஷயம்:— ஸ்ரீ. உ. வே. கே. எஸ். ஸ்ரீநிவாஸாசார்யர் 298

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தமும், தர்மசாஸ்த்ரங்களும் 1,17

மதாபிதாக்களிடத்திலிருக்கவேண்டிய முறை:—ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர். 252

விஜ்ஞாபனம்:— கார்யதர்சி 1
ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் உன்னத பதவி:— கார்யதர்சி
ஸ்ரீபாகவத தனிச்லோகி:— பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 33-67,91,129
ஸ்ரீபெரும்பூதூர் ஆதிகேசவப்பெருமாள்:— ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 89
ஸ்ரீமத் ராமாநுஜ மதாபிவ்ருத்தி:— ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர் 158,192
ஸ்ரீராமாயண தத்வார்த்தம்:— ஸ்ரீ. உ. வே. காடாம்தேத்தி கோபாலாசார்யர் 76,114
ஸ்ரீவிஷ்ணு பக்தி:— ஸ்ரீ. உ. வே. என். ரங்காசார்யர் 235
ஸ்ரீவிஷ்ணு ஷட்பதி:— பத்ராதிபர் 145
ஸ்ரீவைஷ்ணவர்களும் அவர்களின் லக்ஷணங்களும்:— பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 28,55
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும், ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும்:— பண்டித ரத்னம் லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் 174, 209
ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் பதின்மூன்ருவது வருஷத்திய அறிக்கை:—
ஸ்ரீஸச்சரித்ர ரக்ஷை:— தமிழ்மொழி பெயர்ப்புடன், பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர்
ஸபையின் அங்கத்தினர்களின் வார்ஷிக மஹாஸங்கம்:— 121
ஸம்வத்ஸரமுடிவில் விஜ்ஞாபனம்:— கார்யதர்சி 324
ஸர்வேச்வரகாருண்யம்:—வங்கீபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீராமதேசிகாசார்யர் 236,261,341

186742

ஸ்ரீ:

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம்.

இந்த கைங்கர்யத்தை உத்தேசித்து மஸுலிபட்டணம் ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உ. வே. டி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர் ஸ்வாமியால் ப்ரதிவருஷம் விசிஷ்டாத்வைத விஷயமான முதல்தரமான வ்யாஸம் எழுதுவோருக்கு ஸம்மானம் கொடுத்துவந்ததில் நமது ஸித்தாந்தத்திற்கு சாச்வதமான உபகாரம் இல்லாமலிருப்பதைக்கண்டு, இவ்வருஷமாவது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்துக்கு ஒரு சாச்வதமான உபகாரம் உண்டாகவேண்டுமென்று எண்ணி, ஸ்ரீமந் நிகமாந்த தேசிகரால் அருளிச் செய்யப்பட்டிருக்கும் பரமபத ஸோபானம் என்னும் க்ரந்தத்துக்கு ஒரு விஸ்தாரமான வ்யாக்யானம் எழுதச்செய்யவேணும் என்று உத்தேசித்து, இந்த கைங்கர்யத்தை நிறைவேற்றிவைக்க பண்டிதபூஷணம் சேட்டலூர் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யார் ஸ்வாமியைப்ப்ரார்த்தித்து, அந்த ஸ்வாமியும் எழுதுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார் — இந்த வ்யாஸம் தீபிகையில் 15-வது ஸம்புடத்தின் முதல் ஸஞ்சிகை முதல் வெளிவரும்.

கா.

ராவ்ஸாஹிப்-டில்லி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் உபந்யாஸங்கள்.

இந்த ஸ்வாமியின் த்ரவ்ய ஸஹாயத்தால் தஞ்சாவூர் ஜில்லாவில் அய்யம்பேட்டைக்கு வடக்கிலுள்ள ஸ்தலங்களில் உபந்யாஸம் செய்யும்படி ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ. உ. வே. கெடுத்தெருவு ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி நடுவக்கரை என்னும் க்ராமம் சென்று அவ்வூரில் சென்ற ஆவணிமீ 12, 13, 14உ களில், ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் பெருமை, வைஷ்ணவர்கள் தத்காலம் அடைந்திருக்கும் தாழ்ந்த நிலைமை, அதைச்சீர்திருத்தும் ப்ரகாரம், ஆர்யமதத்தின் மேன்மை, தத்வஜ்ஞானம், பகவத்க்ருபை, ஸதாசார்ய கடாக்ஷம், பகவன்நாம வைபவம் முதலிய விஷயங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தார். அவ்வூரிலிருக்கும் எல்லோரும் இந்த உபந்யாஸங்களைக் கேட்டு, தங்களை சீர்திருத்த முயர்ச்சி எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள். தேசபக்தி உள்ள ராவ்ஸாஹிப் ஸ்வாமிக்கு தங்களுடைய வந்தனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

கா.

அ ஹோ பி ல ம ட ம்.

ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமி சிஷ்யர்கள் உஜ்ஜீவிக்கும்படி மானாமதுரையில் சில துகாலம் எழுந்தருளி இருந்து அவ்விடம் விட்டு சென்ற ஆவணிமீ 31உ ஸ்ரீ ரங்க யாத்ரையாக எழுந்தருளுவதாக ஸ்ரீ முகம் கிடைத்திருக்கிறது.—இன்னும் ஸ்ரீரங்கம் எழுந்தருளினதாகத் தெரியவில்லை. மத்யே மார்கம் ஸஞ்சாரத்தில் எழுந்தருளியிருக்க வேணும்.

கா.

ஸ்ரீ. உ. வே. S. R. தேசிகாசார்யர், ஸ்ரீ வைகுண்டம்.

இந்த ஸ்வாமி சென்றவாரத்தில் ஆசார்யன் திருவடிகளை அடைந்து விட்டதாக ஸங்கதி கேழ்க்க மிகவும் துக்ககரமாயிருக்கிறது. இந்த ஸ்வாமி முதல் வகுப்பு மெம்பராகயிருந்து இந்த ஸபைக்குச் செய்திருக்கும் உபகாரத்தைச் சொல்லிமுடியாது. ஸபையின் அநுசோசனத்தை அவருடைய குடும்பத்தார்களுக்கு அறிவிக்கிறோம்.

கா.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை—திருவாரூர்.

இச்சபையின் ஏழாவது வார்ஷிக மஹோத்ஸவம் நாளது ரக்தாக்ஷி(ரு) ஆவணிமீ 16உ (31—8—24) யில் திருக்கண்ணங்குடியில் ஸ்ரீ தாமோதர நாராயணப்பெருமாள் ஸந்நிதியில் வெகு விமர்சையாய் நடைபெற்றது. காரப்பங்காடு, ஸ்ரீ உப. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி அக்ராஸனம் வஹித்தார்.

ஸ்ரீ உ. வெ. குப்புஸ்வாமி பட்டாசார்யர் திருக்கண்ணங்குடி திவ்யதேசத்து மஹிமையை விஸ்தாரமாய் ப்ரதிபாதித்து ஸபையின் வர்ஷோத்ஸவத்திற்கு விஜயம் செய்திருந்த ஆஸ்திக கனவான்களையும் ஸ்ரீ உ. வெ. சிங்கப்பெருமாள் ஸ்வாமியையும் நல்வரவு கூறி அழைத்தார்.

காரியதர்சி ஸபையின் ஏழாவது வருஷ ரிபோர்ட்டைப் படித்தார். அதில் ஒரு முக்யமான அம்சம் என்னவென்றால் இங்கிலீஷ் படிக்கும் பிள்ளைகளுக்கு நமது மத ஸம்பந்தமான படிப்பும் ஆசார அநுஷ்டானங்களும் ஸபையாரால் கற்பிக்கப்பட்டு வருகின்றன என்பது. இந்த வர்ஷோத்ஸவத்தில் மேற்கூறிய பிள்ளைகள் அக்ராஸநாதிபதிக்கு முன்பு பரீக்ஷிக்கப்பட்டு, கனம் பொருந்திய கீழ்வேளூர் அ. அருணாசல முதலியார் அவர்களாலும் நாகப்பட்டணம் கல்விச்சங்கத்தா (ஸ்ரீ வேதாந்த ச்ரவண ஸபையா)ராலும் ஸம்மானம் அளிக்கப்பட்டார்கள்.

பிறகு அக்ராஸநாதிபதி "பெரியாழ்வார் வைபவம்" என்னும் விஷயத்தை அதிகரித்து அந்த ஆழ்வாரின் வரலாற்றையும் அவருக்குப் பெரிய ஆழ்வார் என்ற திருநாமம் வந்ததற்குக் காரணத்தையும், திருப்பல்லாண்டின் மஹிமையையும், வேதத்திற்கு ப்ரணவம் எப்படியோ அப்படியே திவ்யப்ரபந்தத்திற்கு திருப்பல்லாண்டு இருக்கிற ப்ரகாரத்தையும் வெகு அழகாய் உபந்யஸித்து இந்த ஸபையின் மேன்மேல் அபிவிருத்தியைக்கருதி மங்களாசாஸனம் செய்தருளினார்.

பிறகு ஸ்ரீ உப. வே. காடக்தேத்தி கோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. வே. வேளுக்குடி சேஷாத்ரியாசார்ய ஸ்வாமி, மன்னார்குடி ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி முறையே விசிஷ்டாத்வைதம், பாகவத ஸ்வரூபம், வர்ணாச்ரம தர்மம், என்கிற விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய் உபந்யஸித்தார்கள்.

பிறகு விஜயபுரம் சேஷாத்ரிஅய்யங்கார் ஸ்வாமி திவ்ய தேசந்தோறும் போய் அர்ச்சாரூபியான எம்பெருமானை ஸேவித்து, க்ருதார்த்தராகிறது ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவனுடைய கடமை. இத்திவ்ய தேசங்கள் பகுவித சச்சரவுகளால் மாலின்யத்தை யடைந்து வருகின்றன என்கிறது மிகவும் துக்கிக்கத்தக்கது. இத்தகைய சச்சரவுகளை கோர்ட்டுக்குப் போகாமல் நாமாகவே தீர்த்துக்கொண்டு ஸௌஜன்யமாய்ப் போக முடியவில்லையே.

இம்மாதிரியான ஸ்ரீ வைஷ்ணவ ஸபைகள் அங்கங்கே மத்யஸ்தர்களாகவிருந்து திவ்யதேசங்களில் ஏற்படும் சச்சரவுகளை ஸௌகர்யமாய்த் தீர்த்து அந்த திவ்ய தேசங்களை மேன்மையான ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டியது அவர்களுடைய முதன்மையான கடமை என்றும், இன்னும் இம்மாதிரியான அபிப்ராயங்களையும் வற்புறுத்தி, ஒரு உருக்கமான ப்ரஸங்கத்தைச் செய்தார்.

கடைசியில் நாகப்பட்டணத்திலிருந்து ஸதஸ்ஸுக்கு விஜயம் செய்திருந்த ஆஸ்திக கனவான்கள் இச்சபையின் எட்டாவது வர்ஷோத்ஸவத்தை வருகிற வருஷத்தில் நாகப்பட்டணத்தில் நடைபெறச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். பிறகு அக்ராஸனருக்கும் உபந்யாஸகர்களுக்கும் ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. பொருளுதவிசெய்த கனவான்களுக்கும் மற்ற ஸபா அபிமானிகளுக்கும் வந்தனோபசாரம் செய்து இவ்வருஷத்திய மஹோத்ஸவம் முடிவு பெற்றது.

டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ., எல். டி.,

காரியதர்சி.